594

# ஜகன்மோகினி

## இணையற்ற தமிழ் அமுதம்

பொங்கல் மலரில் விருந்தளிக்கும் அன்பர்கள் :-

1. சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்
2. கவியோகி சுவாமி சுத்தானந்த பாரதியார்
3. கலாநிதி பி. ஸ்ரீ. ஆசார்யா.
4. ராவ் சாஹிப் எஸ். வையாபுரிப் பிள்ளை.
5. திவான்பகதூர் வி. பாஷ்யம் அய்யங்கார்
6. திவான்பகதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி
7. ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்.
8. ஜெகதாபி ரகுபதி ரங்கராஜு-காரு
9. வரகவி திரு அ. சுப்ரமண்ய பாரதி.
10. கே. எஸ். வேங்கடரமணி
11. கி. வா. ஜகந்நாதன்.
12. கா. ஸ்ரீ. ஸ்ரீ.
13. ரா. ஸ்ரீ. தேசிகன்.
14. "பழைய கை"
15. காப்டன். என். சேஷாத்திரிநாதன்
16. பி. ஆர். ராஜ சூடாமணி
17. ஜி. ரங்கஸ்வாமி ஐயங்கார்.
18. "குமுதினி"
19. எஸ். அம்புஜம்மாள்
20. ஜானம்மாள்
21. ஜெயலக்ஷ்மி ஆர். ஸ்ரீநிவாஸன்
22. கமலா பத்மநாபன்
23. காயனபடு வி. ஸரஸ்வதிபாய்
24. எம். எஸ். கமலா.
25. ஜானகி
26. சகோதரி சுபலக்ஷ்மியம்மாள்
27. கி. ஸாவித்திரி அம்மாள்
28. தங்கம்மாள் பாரதி

**நமது சித்திர நிபுணர்கள்**

ஏ. வி. ராகவன்
எம். ஸாமுவேல்
"அனுஷம்"
"விஜய்"
"குஞ்சான்"
மற்றும் சிலர்

★

**நமது போடோ நிருபர்கள்**

வத்ஸன்
வாதூலன்
காச்யபர்

★

நமது ஸ்ரீவைஷ்ணவ அன்பர்களுக்கு.

ஸ்ரீ. கோ. க. வா. அ. ஸ்ரீசைலாச்சாரியார் ஸ்வாமி
ஸ்ரீ. பி. ப. அண்ணங்கராச்சாரியார் ஸ்வாமி

"[illegible] ...ர்கள் :
[illegible] ...மு. ஸ்ரீ. 33. வை. மு. பத்மினி.

**மோகினி அன்பர்கட்கு விசேஷ அறிவிப்பு**

நாளது 22-வது ஆண்டு

**பொங்கல் மலர்**

**1—1—1945**

மோகினி இதழுடன் வெளியாகும்.

★

இக் கலைபொக்கிஷம் முன்னதாகப் பதிவு செய்பவர்களுக்கே அனுப்பப்படும். ஏற்கெனவே பணம் அனுப்பாதவர்கள் நேரிலோ, ஏஜண்டு மூலமோ ரூ. 2/—செலுத்தி, தங்கள் பிரதியை ரிஸர்வ் செய்து கொள்ளவும்.

உடனே முந்துங்கள்

## குறிப்பு

மலரும் சந்தாவும் ரூ 5.
மலரும் ஜனவரி மோகினியும் 2-4-0
மலர்மட்டும் தனியாக தபாலில் அனுப்ப முடியாது:

23 DEC 1944

JC
ஜ211, x122 Jm
N44.H.12
183096

...NI. SINGAPERUMALKOIL.

LARGEST CIRCULATED ... 1923

4 ANNAS

ILLUSTRATED TAMIL MONTHLY

தாரண கார்த்திகை
December 1944

# க்ஷேமலாபங்கள்

மாதவன் இல்லாத மானிட வாழ்வொரு
மண்புழு வாழ்க்கையன்றோ!
மாதவனில்லாக் கலையெல்லாம் ஊரை
மயக்கிடும் மாயமன்றோ!

சுத்தானந்த பாரதி

கீதாசாரியனின் கிருபாகடாக்ஷத்தினாலும், பாடலாத்ரி நரஸிம்மனின் பேரருளினாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும், அன்பர்களின் ஆதரவினாலும், மோகினி "ஒரு கலைச்செல்வியாக அணிநடை துலங்குகிறள்" என்ற நன்மதிப்பைப் பெற்றுவருகிருள். இவ்விதமுடன் 21 ஆண்டுகள் இனிது முடிவடைந்து, நாளது ஜனவரியில் 22-வது ஆண்டு மங்களகரமாக பொங்கல் புதுமலருடன் ஆரம்பமாகின்றது.

இவ்விதழிலும், சென்ற இதழிலும் கொஞ்சம் பக்கங்கள் குறைவெனினும், மொத்தம் இவ்வருட 12-இதழ்களில் 682 பக்கங்கள் வெளியாகியிருக்கின்றன வென்பதைக் குறிப்பிடவேண்டியதவசியம். கவிதா மலர்கள், கட்டுரைகள், கதைகள், வரலாறுகள், உன்னதமான ஆதர்சங்கள், அறிவுமணிகள், படங்கள், நகைச்சுவை, ஆழ்ந்த கருத்துக்கள்—யாவும் அறிஞர்களின் உள்ளத்தினின்றெழுந்து மோகினியின் ஒவ்வொரு இதழிலும் உங்களைப் பரவசப்படுத்திவருகின்றன. வருட ஆரம்பத்தில் சராசரி மாதம் 48 பக்கங்களே வெளியிட முடிந்தது; ஆனல் இப்போது வருடமுடிவில் கணக்குப்பார்த்தால் சராசரி மாதம் 56 பக்கத்திற்கு மேலாகிறது. விளம்பரங்களைச் சேகரிக்காது பிரஸித்திபெற்ற அறிஞர்களின் விஷயத்தையே பூரணமாகத் திணித்துக்கொண்டு வெளிவரும் தமிழ் பத்திரிகை 'மோகினி' ஒன்றே.

நாளது ஜனவரி இதழ் முதல் மோகினி 48 பக்கங்களுடன் ரஸமான அம்சங்களைத் தாங்கி வெளிவரும். கூடிய சீக்கிரமே, **56** பக்கங்களுடன் வெளியிடப் போதுமான நியூஸ்ப்ரிண்ட் அளிப்பார்களென எதிர்பார்க்கிறேம். அவ்வாறு அதிகரித்த பக்கங்களுடன் வெளியிட அனுமதி கிடைக்கும் வரை 48 பக்கங்கள்தான் வெளியிடமுடியும் தற்போதைய ரேஷன் விதிகள்படி. 1944 ஷு மாதாந்திர சராசரி 56 பக்கங்களென்பதால், 1945லும் அதே அளவில் வெளியிடவேண்டுமென்பது எங்களது அவா. ஒவ்வொரு பக்கத்திலும் வாசகர்களுக்கு ரஸமான விஷயத்தையே அளிப்பது எங்களுக்குப் பெருமையும் திருப்தியும். ரஸிகர்களின் மகிழ்ச்சியே எங்கள் முயற்சியின் லட்சியம் என்பது எல்லோரும் அறிந்ததே.

வருட ஆரம்பத்தில் வெளியாகும் 22-வது ஆண்டுப் பொங்கல் புதுமலருக்கு விஷயதானம் செய்யும் அறிஞர்களின் பெயர்களை இவ்விதழின் மேலட்டையில் கண்டீர்களல்லவா! இந்த ஜாபிதாவைப் படிக்கையிலேயே "ஓர் அரிய பெரிய விருந்து தயாராகிவருகிறது" என்ற எண்ணம் உங்கள் மனத்தில் எழும். மலரைச் சிறப்பிக்க இசைந்துள்ள பெரியோருக்கு உங்கள் சார்பாகவும் எமது நன்றியறிதலுடன் கூடிய வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேம்.

ஏராளமான விளம்பர வருமானமின்றி, சிறந்த அம்சங்களுடன், படப்பொலிவுடன் வெளிவரும் இவ்வரிய மலர் மிகவும் குறைந்த விலைக்கே கொடுக்கப்படுகிறது. ஏனெனில் மலரில் வெளிவரும் 66-வது நவீனம்

# ஜகன்மோகினி

தனிப்பிரதி அணா 4.
வருட சந்தா ரூ. 3.
22-வது ஆண்டுமலர் ரூ. 2

183096.

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. -திருவள்ளுவர்

ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து. -வீரராகவ கவி

Vol. 21. No. 12. தாரண கார்த்திகை December 1944.

## இந்த மாதம்

★

திருமங்கை மன்னன் திரு நக்ஷத்திரம்

★

திருக் கார்த்திகை பண்டிகை

★

திரு அண்ணாமலை தீபம்

★



23 DEC 1944
MADRAS
183096.

பி.ஸ்ரீ

# தவ ஒழுக்கம் பூண்ட தாஸிப்பெண்

'இந்தக்காலத்தில் பட்டினம் என்ருல் சென்னப் பட்டினம்தான், நகரங்களுக்கெல்லாம் அன்னை சென்னை என்று சமீபகாலத் தமிழ்ப்புலவரும் சிவநேசருமான முருகதாஸ ஸ்வாமிகளும் ஒப்புக்கொள்ளுகிருர். பழைய காலத்திலோ சென்னைப் பட்டினமென்ற ஒரு பட்டினமே கிடையாது. காவிரிப்பூம்பட்டினத்தையே பட்டினம் என்றும், பட்டினங்களின் அன்னை என்றும் போற்றினுர்கள்.

### தவ ஒழுக்கம்

அத்தகைய காவிரிப்பூம் பட்டினத்திலே இந்திரவிழா என்ற உத்ஸவம் நடைபெற்றுவருகிறது. "நடனத்தில் பிரசித்திபெற்ற மாதவியும் மணிமேகலையும் வந்து இந்த விழாவைச் சிறப்பிக்கவில்லையே!'' என்று ஊரார் பெரிதும் வருந்தினுர்கள். மாதவி தாஸி குலத்தைச் சேர்ந்தவள்; அவளுடைய மகள்தான் மணிமேகலை. கோவலன் என்று சிலப்பதிகாரப் பிரசித்திபெற்ற வணிகனுடைய அபிமான பத்தினியாக இருந்து அவனைக் கணவனுகவே மதித்து வாழ்ந்தவள் மாதவி. அந்தக் காதலன் மதுரையில் கொலையுண்டபின் தவ ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தாள். பௌத்தாசாரியர் ஒருவர் அவளைத் தவ வழியில் செலுத்தினுர்.

இந்த நிலையில், "நான் தாஸிகுலத்திற்குரிய தொழிலுக்கு இனி உரியவளில்லை'' என்று விழாவுக்குப் போக மறுத்துவிட்டாள். தன் மகளாகிய மணிமேகலையை இவள் தன் மகளாகக் கருதாமல் பத்தினிக் கடவுளாகிய கண்ணகியின் மகளாகவே கருதி வந்ததால் மணிமேகலையும் தவ வழிக்கே உரியவள் என்று உறுதியாகச் சொல்லிவிட்டாள்.

### பூக்கொய்யப் போனது

மணிமேகலை ஒருநாள் ஒரு பூமாலைதொடுத்துக்கொண்டிருந்தாள். அப்போது, தன் தாய் தந்தையரான கண்ணகிக்கும் கோவலனுக்கும் நேர்ந்த கதியை எண்ணி மனங் கலங்கி அழுதுவிட்டாள். அந்தக் கண்ணீர், பூமாலையை நனைத்துவிட்டது. மாதவி இவள் கண்ணீரைத் துடைத்துத் துக்கத்தை ஒரு வகையாக மாற்ற வேண்டுமென்று, "இந்த மாலை உன் கண்ணீரால் அசுத்தமாகிவிட்டது; வேறு மாலை தொடுப்பதற்கு நீ சோலைக்குப் போய்ப் புது மலர் பறித்து வா'' என்ருள்.

அச்சமயம் சுதமதி என்ற ஒரு பிராமணப் பெண்ணும் கூட இருந்தாள். அவள் சொன்னுள்: "உபவனம் என்று ஒரு வனம் உண்டு; அங்கே உன்மகள் பூக்கொய்யலாம்; நானும் துணையாகச் செல்கிறேன்.'' அப்படி அவள் சொன்னதும் அந்த இருவரும் புறப்பட்டார்கள். மணிமேகலையைக் கண்டதும் பலர் அவளைச் சூழ்ந்துகொண்டு "இவளைத் தவ வழியில் புகுத்திய தாய் மிகவும் கொடியவள்'' என்று ஒருமுகமாக அபிப்பிராயப்பட்டார்கள்.

### உதயகுமாரன் காதல்

மணிமேகலையும் சுதமதியும் அவர்களையெல்லாம் லட்சியம்செய்யாமல் உபவனத்தில் புகுந்து அந்த வளங்களையும் அழகுகளையும் பார்த்துக்

கொண்டிருந்தார்கள். அது தெரிந்து பல நாளாக மணிமேகலையை விரும்பிக்கொண்டிருந்த உதயகுமரன் தன் இரதத்திலே உபவனத்தைச் சூழ்ந்த மதில் வாசலுக்கு வந்து சேர்ந்தான்,

இரதத்தின் ஒலி கேட்டதும் மணிமேகலை, விஷயத்தை ஊகித்துக் கொண்டாள். அந்தச் சோலையில் பளிங்கினால் செய்த அறை ஒன்று உண்டு. சுதமதி மணிமேகலையை அந்த அறைக்குள் இருக்கச்செய்து தாழ்ப்பாளும் இட்டுக்கொள்ளச் சொன்னாள். தான்மட்டும் அந்த அறைக்குச் சிறிது தூரத்திலேயே நின்றாள்.

உதயகுமரன்சுதமதிஇருந்தஇடத்திற்கு வந்துவிட்டான்; அவளோடு உரையாடத் தொடங்கினான். அந்தப் பளிங்குமண்டபம் தனக்குள் இருந்தவர்களுடைய ஓசையை வெளிப்படுத்தாது; ஆனால் உருவத்தைப் பிரதிபலித்துக் காட்டும். உள்ளேயிருந்த மணிமேகலையின் உருவம் கண்ணுக்குத் தெரிந்ததும், உதயகுமரன் அந்த அறைக்குள்ளே போக முயன்றான். ஆனால் அதன் வாசல் இன்ன இடத்திலிருக்கிறதென்று கண்டுபிடிக்க முடியவில்லை. பளிங்குச் சுவரைக் கையால் தடவிக்கொண்டு சுற்றி வந்தான். சுதமதி புத்திசொல்லிவந்தாள். பயனில்லை.

காம பரவசனாக இருந்த அந்த அரசிளங்குமரன் கடைசியாக அந்தச் சோலையைவிட்டு நீங்கினான். அவன் போனதும் மணிமேகலை அறையிலிருந்து வெளியே வந்து சுதமதியை நோக்கி, "உதயகுமரன் என்னை விலைமாதென்று நினைத்தும் என் நெஞ்சம் அவன் பின்னே செல்லத் தொடங்கியது. காரணம் என்னவோ?" என்று கேட்டாள்.

## குலதெய்வத்தின் உதவி

அப்படிக் கேட்டு நின்றபோது இந்திர விழாவைப் பார்க்கவந்த மணிமேகலா தெய்வம் ஒரு பெண் வேஷத்தில் அந்தச் சோலைக்கு வந்து சேர்ந்தது.

அது தன் மாய வித்தையால் மயக்கி, சுதமதி தூங்கும்போது மணிமேகலையை எடுத்துக்கொண்டு ஆகாய வழியே போய் மணிபல்லவம் என்ற சிறுதீவில் அவளை வைத்துப் போயிற்று. பிறகு அந்தத் தெய்வம், காமத்தால் தூங்காமலிருந்த உதயகுமரன் முன்னே போய்,

தவத்திறம் பூண்டோள்
தன்மேல் வைத்த
அவத்திறம் ஒழிக

என்று அவனுக்குப் புத்தி சொல்லிற்று.

பிறகு உபவனம் சென்று உறங்கிக்கொண்டிருந்த சுதமதியை எழுப்பி, "நான் மணிமேகலா தெய்வம். இந்நகரில் நடக்கும் இந்திர விழாவைக் காணவந்தேன். நீ பயப்படாதே. பௌத்த ஞானம் அடையக்கூடிய நல்ல காலம் மணிமேகலைக்குவந்துவிட்டது. அவளை மணிபல்லவத்தில் விட்டுவைத்தேன். ஏழாவது நாள் இங்கே வந்து சேருவாள். இந்தச் செய்தியை மாதவிக்குச் சொல்லு. 'நமது குலதெய்வத்தின் பெயரை இக்குழந்தைக்கு இட வேணும்' என்றுதானே என் பெயரைக் கோவலன் இவளுக்கு இட்டு வைத்தான். ஆகவே எனக்கு என் பெயர்வாய்ந்த இப்பெண்ணிடம் கருணை உண்டு" என்று சொல்லிப் போயிற்று. சுதமதி மாதவியை அடைந்து நடந்ததையெல்லாம் தெரிவித்தாள்.

இது இப்படி இருக்க, மணிபல்லவத்தில் கடல் அருகே மணலில் துயின்ற மணிமேகலை, துயில்



உணர்ந்து எழுந்தாள். தனக்குத் தெரிந்த பொருள் யாதொன்றையும், தனக்குத் தெரிந்தவர் ஒருவரையும் காணாததால் திகைத்துக் கூக்குரலிட்டாள். அப்போது அவளுக்கு முன் புத்த பீடிகை என்ற பீடம் தோன்றியது. அந்தக் காட்சியால் தன் பழம் பிறப்பில் நடந்த செய்திகளை அவள் அறிந்துகொண்டாள். அந்தப் பிறப்பில் இராதுலன் என்பவனுக்குத் தான் மனைவியாய் இருந்ததாகவும் தெரிந்துகொண்டாள்.

பிறகு மணிமேகலா தெய்வம் இவளிடம் வந்து, "இராகுலன்தான் உபவனத்தில் உன்னிடம்வந்த உதய குமரன். அதனால்தான் அவனுடைய மனம் உன்னை விரும்பியதன்றி, உன் மனமும் அவனை விரும்பியது. அந்தப் பற்றை மாற்றி நல்வழிப் படுத்தவே உன்னை இங்கே கொண்டு வந்தேன்" என்று சொல்லிற்று. மறுபடியும் அத்தெய்வம் மணிமேகலையை நோக்கி, "முற்பிறப்பில் உன் தமக்கையாக இருந்த தாரை என்பவள்தான் உன் அன்னையாகிய மாதவி. வேறொரு தமக்கையாக இருந்த வீரைதான் உன் தோழியாகிய சுதமதி" என்றும் தெரிவித்தது, அப்பால் அவளுக்கு அத்தெய்ம்வ, வேற்று வடிவம் கொள்வதற்கும், ஆகாயவழியே சஞ்சரிப்பதற்கும், பசியைத் தொலைப்பதற்கும் வேண்

டிய மந்திரங்களையும் உபதேசித்துச் சென்றது.

### அக்ஷய பாத்திரம்

புத்தர் அவதரித்த தினமாகிய வைசாக சுத்த பூர்ணமியன்று மணிபல்லவத்தீவில் கோமுகி என்ற பொய்கையிலிருந்து 'அமுத சுரபி' என்ற அக்ஷய பாத்திரம் ஒன்றும் மணிமேகலைக்குக் கிடைத்தது. அதில் இடப்பட்ட அன்னம் எடுக்க எடுக்க மேன்மேலும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

**உண்டி கொடுத்தோர்**
**உயிர் கொடுத்தோரே**

என்ற உண்மையைத் தெரிந்து கொண்டாள் மணிமேகலை. பசியால் வாடும் குழந்தை முகம் கண்டு பால் சுரக்கும் தாய்போல் ஏழை முகம் கண்டு இரங்கி இப்பாத்திரம் அவர்களுக்கு உணவு அளித்தலைக் காண வேண்டும் என்ற விருப்பம் இவளுக்கு ஏற்பட்டது. பிறகு ஆகாய கமன மந்திரம் ஜபித்து மேலே எழுந்து மாதவியும் சுதமதியும் இருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தாள் அக்ஷயபாத்திரத்துடன்.

அப்பால் அம் மூவரும் அறவண அடிகள் என்ற முனிவரை அடைந்தார்கள். அவர் மணிமேகலைக்கு ஆபுத்திரன் வரலாற்றைச் சொல்லி அந்த அக்ஷயபாத்திரத்தின் மரபையும் தெரிவித்தார். 'ஆபுத்திரன்,' என்றால் 'பசுபுத்திரன்.' உண்மையில், அவன் நியமம் தப்பிய ஒரு பிராம்மண ஸ்திரீயின் புத்திரன் என்றும், அவள் விட்டுப்போன குழந்தையை ஒரு பசு ஏழுநாள் வரையும் பாலூட்டித் தன் புத்திரனை வளர்த்துவந்ததென்றும் அறவண அடிகள் சொன்னார். அந்த ஆபுத்திரன் ஒரு யாக பசுவைக் காப்பாற்றி, ஜீவ ஹிம்ஸை செய்யும் யாகங்களையும் ஜாதிபேதங்களையும் பரிகசித்தான் என்றும், அதே ஜீவ காருண்ய உணர்ச்சியுடன் அவன் பிச்சையெடுத்தும் ஏழைகளைக் காப்பாற்றி வந்தானென்றும், அப்பேர்ப்பட்ட கருணையாளனிடம் கருணைகூர்ந்து 'சிந்தாதேவி' என்ற கலைமகளே அக்ஷயபாத்திரம் ஒன்று அவனுக்குக் கொடுத்தாள் என்றும் சொன்னார். அதே தெய்வப் பாத்திரம் தான் மணிமேகலைக்குக் கிடைத்திருக்கிறதென்றார். அது கேட்ட மணிமேகலை அறவண அடிகளை வணங்கித் துதித்து அக்ஷய பாத்திரமும் கையுமாக, பிக்ஷுணிக் கோலம் பூண்டு புறப்பட்டாள்.

கற்பில் சிறந்த ஆதிரை அளித்த பிச்சையை முதலில் ஏற்றுக்கொண்டாள் மணிமேகலை. அக்ஷயபாத்திரத்திலே அந்தச் சோறு எடுக்க எடுக்கக் குறையாமல் வந்தவர்களுடைய பசியையெல்லாம் போக்கிற்று. இதையறிந்த உதயகுமரன் மணிமேகலையைச் சந்தித்தான். பழம் பிறப்பில் கணவனாய் இருந்த அவனை இவளும் வணங்கிப் பிறகு ஒரு மர்திரத்தை ஜபித்து அப்பால் வேற்று வடிவம்கொண்டாள். மணிமேகலை தன் மாறுவேஷத்திலேயே பலருடைய பசிப்பிணியையும் போக்கிக்கொண்டிருந்தாள்.

இப்படியிருக்க, உதயகுமரன் ஊழ்வினையால் வெட்டுண்டு மரணமடைகிறான். இதையறிந்த மணிமேகலை பெரிதும் புலம்புகிறாள். தன் மகன் உதயகுமரனுடைய கதியையறிந்த அரசன் மணிமேகலையைச் சிறைப்படுத்துகிறான். கடைசியாக அவள் விடுதலை பெறுகிறாள். பலவேறு சமயவாதிகளுடைய கொள்கைகளையும் அறிந்துகொள்கிறாள்.

**புத்தம் சரணம் கச்சாமி**
**தர்மம் சரணம் கச்சாமி**
**ஸங்கம் சரணம் கச்சாமி**

# மரண பயம்

காப்டன். என். சேஷாத்ரிநாதன் M.B., B.S., D.T.M.

மற்றெல்லாப் பிராணிகளின் வாழ்வைப்போலவே மனித வாழ்வும் அபாயம் சூழ்ந்தது. ஒரு மெல்லிய நூலிலே தொங்குவதெனக்கருதலாம் மனிதவுயிரை. விதியின் இஷ்டப்படி இநத ஆதாரநூல் அற்றுப் போகலாம். இதனாலேதான் நாம் இரவில் ஏதாகிலும் ஒரு விஷயத்தை யோசனை செய்தால், ''பிழைத்துக் கிடந்தால் பார்ப்போம்'' என்று சொல்லுகிறோம் வழக்கமாக.

நாகரிகமின்றிக் கானகத்தில் திரிந்த மனிதன் இடி, மின்னல், பிரளயம், அக்னி இவைபோன்ற இயற்கைச் சக்திகளைக்கண்டு பயந்தான். ஆனால், இப்பொழுது நகரங்களில் நாகரிகமடைந்து வாழும் மனிதனோ, இயற்கைச் சக்திகளெல்லாம் தன் ஆட்சிக்கு உட்பட்டு விட்டதாக எண்ணுகிறான். பூமண்டலத்திற்கே வேந்தன் எனத் தன்னை எண்ணிக்கொள்ளுகிறான். இருந்தபோதிலும் அவனுக்கு எதிர்பாராத ஆபத்துக்களும் நேரிடுகின்றன.

பயமென்ற மனநிலை மனிதனுக்குப் பிறவியிலிருந்தே ஏற்பட்டிருக்கிறது. இது தற்காப்பிற்காக ஏற்பட்டது. பயம் ஏற்படும்போதுதான் நாம் நம்மைக் காத்துக் கொள்ளச் சில காரியங்களைத் திடீரென்று செய்ய முற்படுகிறோம். பயத்துக்கு எது காரணமோ அதைக் கண்டு ஓடவோ எதிர்க்கவோ முயற்சி செய்கிறோம். இது மனிதன் அறிவுடன் செய்யும் செய்கை. அவனுடைய உடலில், அவனுக்குத் தெரியாத சில சேஷ்டைகள் காணப்படும். கண், விழிப்புற்று நிற்கும். இருதயம் படபடவென அடிக்கும். வயிறு பதைக்கும். உடம்பு முழுவதும் வியர்த்துவிடும். மயிர்க்கூச்சிடும். கைகால் குளிர்ந்துவிடும். நாக்கு உலர்ந்து போகும். சரீரத்தில் ஏற்படும் இந்தச் சேஷ்டைகளின் உக்கிரம் பயத்தின் அளவைப் பொறுத்தது. இவையாவும் உயிருக்கு நேரிட இருக்கும் ஆபத்தைத் தடுக்க ஏற்படுபவை. ஆகையால் பயமென்ற மனநிலை நமக்கு மிகவும் அவசியந்தான்.

பயமென்பது அளவுக்கு மிஞ்சினால் அபாயத்திற்குக் காரணமாகும். இந்நிலையில் இன்னது செய்வதென்று தெரியாமலே ஸ்தம்பித்துப்போய், எதிர்த்துவரும் ஆபத்துக்கு இரையாகிவிடலாம். மனிதனுடைய விசேஷமான பகுத்தறிவே அவனுக்குச் சில தருணங்களில் அனாவசியமான பயத்தையும் விளைவித்துவிடுகிறது. மனிதன் இந்த அறிவைச் சரியானவழியில் பிரயோகிக்காமல், விபத்தும் கஷ்டமும் எப்படியெல்லாம் வரக்கூடும் என்பதையே எண்ணியெண்ணிப் பயத்தை விருத்தி பண்ணித் தன்னை மனவேதனைக்கும் துன்பத்திற்கும் ஆளாக்கிக்கொள்கிறான்.

அறிவினால் பயம் ஏற்படுவதுபோல், அறிவினாலேயே பயம்

---

என்ற பௌத்த சரணாகதியில் தன் மன இருள் நீங்கும்படி தவமிருந்தாள். பிறர் பசி போக்குவதும் அவர்களுக்குப் பணி செய்வதும் இவள் தவத்தின் முக்கிய அம்சமாக இருந்தன.

தெளிந்துவிடுகிறது. உதாரணமாக, இருளில் ஒரு மரக்கட்டையைக் கண்டு, ஏதோ உருவமெனப் பயப்படுகிறான். அருகில் சென்று பார்த்ததும் அது மரக்கட்டையென்றறிந்து பயம் தெளிகிறான்.

ஒருவனுக்கு வாழ்வு எவ்வளவு கஷ்டமாக இருந்த போதிலும், முடிவுகாலம் வருகையில், முடிவு வந்துவிட்டதே என அவன் பயப்படுவான். அவன் மரணவஸ்தையை எண்ணித்தான் அவ்வாறு பயப்படுகிறான். மரணவஸ்தையை அறிந்துகொள்ள ஸந்தர்ப்பம் கிடைப்பதரிது, மரணவஸ்தையை அனுபவித்துப் பிழைத்த ஒருவனை அது எவ்வாறிருந்தது என்று கேட்டதற்கு அவன் கூறுகிறான்; "நான் பரம ஸுகத்தை அனுபவித்துக்கொண்டிருக்கையில் என்னை எழுப்பி, நோவும், துயரமும் அடையச்செய்து பிழைப்பித்தார்கள்." மரணவஸ்தை உண்மையில் துயரமற்றது. துயரமேற்படாதற்குக் காரணம் மரணம் சம்பவிக்கு முன் மூளைக்கு இரத்தக்குறைவுஏற்பட்டுப் பிரக்ஞையற்றுப் போவதேயாம். நோவுக்கும் துயரத்திற்கும் உரிய உணர்ச்சி—நரம்புகள் வேலைசெய்யா. உடலுக்கு என்ன நேரிடுகிறதென்று அறிவதில்லை. மரணவஸ்தை பார்ப்பவர்களுக்குத்தான் கஷ்டம்.

மரணம் ஒரு குடும்பத்தில் நேர்ந்தால் அதைக் கொண்டாடுவது அவர்களின் ஜாதிப் பழக்கத்தைப் பொறுத்தது. கிறிஸ்தவர்கள் அதிக ஆடம்பரமில்லாமல் பிணத்தைப் புதைப்பார்கள். முகமதியர் இறந்தவரை மௌனமாக அடக்கம் செய்கிறார்கள். இந்துக்கள் ஏகக் குழப்பம் செய்து, அழுது புரண்டு, பின் தகனம்செய்வார்கள். உலக வாழ்க்கையை அனுபவிக்கப் போகும் சிறுவர்கள் இறந்தாலும் சரி, உலக வாழ்க்கையை முற்றும் அனுபவித்த வயோதிகர்கள் இறந்தாலும் சரி, இந்த ஸாகஸம் உண்டு. யூதர்களும் இந்துக்களைப்போல் ஸாகஸம் செய்வதாகத் தெரிகிறது.

வட்ஸ் ஓர்த் (Wordsworth) என்ற ஆங்கிலக் கவி ஒரு சிறு கவிதைஎழுதியிருக்கிறார். ஒருவீரன் யுத்தகளத்தில் இறந்துவிடுகிறான். அவன் பிணத்தை வீட்டிற்குக் கொண்டுவந்ததும், அவன் மனைவி துக்கத்தால் ஸ்தம்பித்து நிற்கிறாள். அதைக் கண்ட ஸகிகள் அவள் ஆருத்துயரமடைந்து இறந்துவிடுவாளென்றெண்ணி, அவளை அழச்செய்யப் பல உபாயங்களைத் தேடுகிறார்கள். ஒன்றும் பயனடையவில்லை. கடைசியாக ஒரு தொண்டு கிழவி, அவளுடைய குழந்தையை எடுத்து அவள்மடியில் வைக்கிறாள். "என் கண்ணே! உனக்காக என் உயிரைக்காப்பாற்றிக்கொள்கிறே'னென்று சொல்லி, குழந்தையைத் தழுவி முத்தமிட்டுத் தாரைதாரையாகக் கண்ணீர் விடுகிறாள். துக்கத்தை அடக்கினால் சிலவேளை உயிருக்கே ஆபத்தென்பது இதன் கருத்தல்லவா ? ஆகையால் வெளியிட்டு அலறித் தீர்க்கவேண்டுமென்றல்லவோ, இந்துக்களும், யூதர்களும், அழுது துக்கத்தை ஆற்றிக் கொள்கிறார்கள்.

அழுது புரளுவது அநாகரிகமான செய்கைதான். கிறிஸ்தவர்களின் சாவுக்கொண்டாட்டம் மேன்மையானமுறையாகும். ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்தபின் தனிமையாக உலாவிக்கொண்டிருக்கிறதா ? பிறகு பரமண்டலமடையும்போது பூமியில் புதைத்திருக்கும் உடலுடன் ஆத்மா சேர்ந்து கடவுள் முன்னே போய் நின்று, தத்தம்

கர்மத்துக்குரிய அனுபோகங்களை அடைகிறதா? இந்தப் பிரச்னைகளை இங்கு நாம் தீர்க்கவேண்டியதில்லை. ஒன்றுமட்டும் நிச்சயமாகக் கூற லாம். அதாவது கிறிஸ்தவக் கொண் டாட்டத்தினலே இறக்கப்போகும் மனிதனுக்குப் பயம் குறைந்து போகிறது. இறந்தவனுடைய உறவி னருக்கும் சிநேகிதர்களுக்கும் ஆறு தல் உண்டாகிறது. இறந்தவன் பரமண்டலத்தில் ஸௌக்கிய மடை கிருனென்றும், அவனுடைய ஆவி அதுவரை புவியில் உலாவிக் கொண்டு தங்களை ரக்ஷிக்கிறதென் றும் எண்ணுகிருர்கள். இறந்தவனை பொறுமையுடனும், வணக்கத்துட னும் மரணக்கொண்டாட்டம் செய் கிருர்கள் கிறிஸ்தவர்கள்.

முகம்மதியருடைய சாவுக்கொண் டாட்டமும் சிறந்ததாகும். "மனிதன் உலகத்தில் ஸகல கஷ்டங்களையும் அனுபவித்தாய்விட்டது. கடவுளை நம்பி ஸகல கர்மங்களையும் செய் தான். அவனுக்குப் பரமண்டலத்தில் சுகங்களும் கிடைக்கும். கஷ்ட மில்லாமல் வாழ்வான். நாமேன் துயரம்டைய வேண்டும்? ஸந்தோஷ மாய் வழி அனுப்புவோம்" என்று எண்ணி, மரணம் ஸம்பவித்தால் துய்ரமடைவதில்லை. இப்படிப்பட்ட நோக்கம் ஓர் உயர்தர நோக்கமே. இதனல் மரணம் வருகையில் பய மேற்படுவதில்லை.

இறந்தவனுடைய உடலைப் புதைக் கலாமா? கழுகுக்குக்கொடுக்கலாமா? எரிக்கலாமா? இந்தப் பிரச்னையைத் தீர்ப்பது எளிதன்று. இதைத் தீர்க்க முயன்ருல் மதவாதிகள் கையில் அகப்பட்டுக்கொள்வோம். ஒவ் வொருவித அனுஷ்டானத்திற்கும் கருத்து இருக்கிறது. இம் மூன்று வித அனுஷ்டானங்களும் ஒரேநோக் கத்தையே கொண்டவை. அதாவது பிணத்தை வைத்திருந்தால் சீக்கிர மாகவே நாற்றமெடுக்கும். ஆகை யால் பிணத்தை மண்ணேடு மண் ணுக்கவோ, வேறுஉயிருக்குப்பயன் படச் செய்யவோ, எரித்துச் சாம்ப லாக்கவோ செய்கிருர்கள். பாரஸீ கர்கள், கண்ணுக்கு முன்பாகவே இறந்தவனுடைய உடல் பயனடை யட்டுமென்று கழுகுக்குக் கொடுக் கிருர்கள். பிணத்தைப் புதைப்பதை விட எரிப்பது ஒரு விசேஷமான செய்கைதான் பூமியில்பிணங்களைப் புதைக்க ஏராளமான இடம் வேண்டும். பூமிக்குள் உடல் எளி தில் ஜீரணமாவதில்லை. உடலை எரித்துவிட்டால் இந்தக் கஷ்டம் கிடையாது. உடலிலுள்ள ஸகல அம்சங்களும் சீக்கிரமாகவே பஞ்ச பூதங்களாக உடனேயே மாறிவிடு கின்றன. பிருதிவி, அப்பு, தேயு வாயு ஆகாசமென்ற பஞ்ச பூதங்களால் செய்யப்பட்ட மனிதனுடைய உடல் இறந்தபின் சீக்கிரமாகப் பஞ்ச பூதங் களாகவேமாறிவிடுவது நலமல்லவா?

மரண பயத்தைக் குறித்துச் சொல்லவந்த நான் பிணத்தைப் புதைப்பதும், எரிப்பதும் பற்றிச் சொல்லவேண்டுமா என்று கேட் டால், அதுவும்அவசியம்தான் என்று சொல்லலாம். இதன் சூக்ஷ்மத்தை யும் தெரிந்துகொண்டால் மரண பயத்தைச் சற்றுக் குறைத்துக் கொள்ளலாம்.

"நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப் படோம்!" என்று கூறி, பயப்படா மல் வாழ்வு நாட்களை நடத்தி, மர ணம் வந்தால் தயாராக இருப்போம்.

## அன்புக் கனி

நல்ல சிந்தனை நாட்டிடு வோமே!
நலிபொ ருமையை ஓட்டிடு வோமே!
வெல்லும் வீறு படைத்திடு வோமே!
வீர ராகத் தலைநிமிர் வோமே!
செல்வ மோங்கத் தொழில்புரிவோமே!
தேச மோங்கப் பணிபுரி வோமே!
கல்வி யோங்கக் கலைவளர்ப் போமே!
கடவு ளாக்கநத் திற்கலப் போமே!

ஓம் சுத்த சக்தி

## ஆத்ம விசாரம்

இப்போது பலருக்குப் பெரிய சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. 'ஆத்மா உண்டா கடவுள் உண்டா!' இந்தக்கேள்வி "குழந்தாய்! உனக்கு அப்பா - அம்மா உண்டா?" என்பதுபோலத்தான். இன்றுலகில் பெரும்பாலார் சிந்தனை தோலுடம் பிற்குமேல் செல்வதில்லை. "நான் இருவர்கூடிப் பிறந்தேன்; நான் வளர்ந்தேன்; நான் பணம் சம்பாதித்தேன்; நான் வயிறு புடைக்கச் சாப்பிட்டேன்; நான் தூங்கினேன், எழுந்தேன், நான் அது செய்தேன், இதுசெய்தேன், அப்படிச் செய்வேன், இப்படிச்செய்வேன்' என்ற பல்லவி பாடி, "எல்லாம் நானாயிருக்க ஆத்மா எதற்கு?" என்ற அனுபல்லவிக்குத் தாவி, நாத்திக வாதத்தில் சரணத்தை முடிப்பதை எங்கும் காண்கிறோம்.

இந்த உணர்ச்சிதான் அரசியல் உலகைப் பிடித்தாட்டுகிறது. நான் வெடி குண்டு போடுகிறேன்; நான் உனது நாட்டை நாசமாக்குகிறேன், நான் உலகை ஆளுகிறேன்--எனக்கு மேல் ஆத்மக்கடவுளில்லை—என்ற நாஸ்திகந்தான் அரசியல் வாதிகளின் அந்தரங்கம். அபூர்வமாக நமக்கொரு மஹாத்மா வாய்ந்திருக்கிறார். அவர் தண்டி யாத்திரையை ராமநாமத்துடன் செய்கிறார்; காலை மாலை ஏராளமான அன்பர்முன் திவ்யநாமசங்கீர்த்தனம் நடத்துகிறார்.

நான் ஸ்வராஜ்யா தினசரி நடத்தியபோது, ஒரு தோழர் ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி அழைத்தார். "சம்மதம்; ஆனால் கூட்டம் தொடங்கும்போதும், முடிக்கும்போதும் பரமாத்ம வணக்கம் பாடவேண்டும். எல்லாரும் என்

னுடன் சேர்ந்து பாடவேண்டும்" என்றேன். 'நாங்கள் ஆத்மா, கடவுள் என்ற மூடக் கொள்கையை நம்புவதில்லை; அது பகுத்தறிவிற் கெட்டாத புராணப் புளுகு!' என்றார் தோழர். சில நிமிஷம் பேசினோம்.

நான்:—நல்லது தோழரே! ஆத்மா பொய் என்றால் பிறகு எதுதான் உண்மை?

தோழர்:—கண்ணால் காணும் உலகம், உடல், மனைவிமக்கள் எல்லாம் உண்மை; கண்ணால் காண முடியாததெல்லாம் பொய்.

நான்:—காற்றைக் கண்ணால் காணமுடியாதே; அது பொய்யோ?

தோழர்:—காற்றை உணருகிறோம் அதனால் மெய்.

நான்:—அதனால் கண்ணால் காணாது உணரும் உண்மை ஒன்று இருக்கிறதல்லவா? அதே மாதிரி உன் ஐம்பொறிகளைக் கடந்த உணர்ச்சியை நம்புவாயா? உன்னுள் உயிர்ப்பது எது?

தோழர்:—நான்தான் என் உடலில் உயிர்க்கிறேன்.

நான்:—அந்த நான் என்பது எது? உடலா?

தோழர்:—ஆம்! உடலே நான்.

நான்:—இது என் உடல் இது என் வீடு என்னும்போது நீ வீடில்லை; வீடு வேறு நீ வேறு; அதுபோல் உடல் வேறு நீ வேறு. உறங்கும்போது உடலுணர்ச்சியில்லை; "கடவுள் உண்டு" என்றாலும் அப்போது சண்டைக்கு வரமாட்டாய். உறங்கும்போது சடமான உடலில் உயிர்ப்பது எது?

தோழர்:—உடல் உண்கிறது, உணவு இரத்தமாகிறது, இரத்தம் பிராணவாயுவால் சூடாகிறது, அது தாதுவாகி நான் உயிர்க்கிறேன், பெற்றுப் பெருகி வாழ்கிறேன்; ஆண் பெண் உடல்சேர்ந்து உலகம் உண்டாகிறது.

நான்:—ஒரு ஆண் பிணமும் பெண்பிணமும் உடலை உண்டாக்குமா?

தோழர்:—மாட்டா; அவற்றுள் உயிரில்லை.


நான்:—ஆதலால் உடல் சடம், பிணம்; அதனுள் ஓர் உயிர் இருப்பதனால் காரியம் நடப்பதை ஒப்புக்கொள்கிறாயல்லவா? இந்த உயிர் எப்படி வந்தது?

தோழர்:—மூக்குவழியாய் உயிர் சென்றுவந்து நடக்கிறது.

நான்:—மூக்குவழியாகச் செல்வது உயிர்க்காற்று; அது இரத்த சுத்திசெய்து உயிரை வளர்க்கிறது. அதுவே உயிரானால் மூச்சு உள்ளே போகும்போதுமட்டும் நீ உயிர்த்து, வெளிவிடும்போது பிணமாவாய். இந்த உயிரையும் ஒன்று உள்ளிருந்து நடத்துகிறது. அதுவே உயிர்க்குயிராயுள்ளது. அதையே சுத்தான்மா என்கிறோம்.

தோழர்:—இன்னும் நன்றாக விளக்கவேண்டும்.

நான்:—தம்பி! நீ தூங்கும்போது எப்படி உயிருடன் இருக்கிறாய்; உடல் கட்டையாக விழுந்து கிடக்கிறது. நெஞ்சந்துடிக்கிறது, காற்றுப்பை உயிர்க்கிறது—மனம் கனாக்காண்கிறது—எதனால்? உறங்கும்போதும் உன்னுள் ஒன்றிருந்து இதெல்லாம் செய்கிறது. அதுதான் உண்மையாக நான் என்னும் ஆத்மா. உதாரணமாக இந்த மின்சார விளக்கிருக்கிறது; இதன் சுடரைக் காண்கிறாய். சுடருக்குள் ஒரு சூக்ஷ்மமான மின்சாரம் இருக்கிறது; அந்த மின்சாரம் குமிழைச் சேர்ந்ததன்று; அது கம்பிவழியாக மின்பொறியிலிருந்து வருகிறது; மின்பொறிக்கு ஆகாயத்திலிருந்து மின்சாரம் வருகிறது—அதேமாதிரி இந்த உடலில் அந்தக்கரணம், அதற்குள் ஆத்மா



அதற்குள் சுத்தாத்மா, அதற்குள் சுத்த பரமாத்மா விளங்குகிறது.

ஒரு படவிளக்கு (Magic Lantern) உள்ளது; அதனுள் உள்ள விளக்குப்போன்றது சுத்தான்மா; விளக்கின் சுடர்போன்றது பரமாத்மா; எண்ணெய் திரிபோன்றது அந்தக்கரணம். ஞான கர்மேந்திரியங்கள் போன்றவை கண்ணாடிகள்-படச்சுருள் சித்தசங்கற்ப விகற்பம் போன்றது, வெள்ளித் திரையில் ஆடும் காட்சி உலகம் போன்றது; இவை அனைத்திற்கும் ஆதாரம் எது? விளக்கொளி. அதுபோலவே மனித தத்துவத்தில் உள்ள, தூல சூக்ஷ்ம காரண சரீரங்களுக்கெல்லாம்ஆதாரமாயிருப்பது சுத்தாத்மா; அதை நடத்துவது பரமாத்மா... அவனே எனக்குத் தலைவன். என்னைக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கச்சொல்லுகிறாய்; கூட்டம் தலைவனைப் பணியவேண்டும்; தலைவனும் தனக்குத் தலைவனான கடவுளைப் பணியவேண்டும். அதற்காகவே உலகுயிர்த் தலைவனான கடவுளை வணங்கவேண்டும்" என்றேன்.

* * * *

இவ்வளவு சொன்னபிறகே ஆளுக்கு உணர்ச்சி வந்தது. கடவுள் வணக்கத்திற்கு சுருதிப் பெட்டி தூக்கிவந்து, அவனும் கருத்துடன் வணங்கினான். உண்மைக் கவிகளுக்கு இந்த ஆத்ம உணர்ச்சி அவசியமாகும்.

---

## சுவாமி சுத்தானந்தரின் அரிய கலை விருந்து.

சென்ற 12 இதழ்களிலும் மோகினி நேயர்களுக்கு அரிய கலைவிருந்து சுவாமிஜியே அளித்திருக்கிறார். ஒவ்வொரு இதழிலும் ஒளி வீசிநின்ற சிறந்த அம்சம் சுவாமிஜியின் உள்ளத்திலிருந்து மலர்ந்த கவிதா மலரும், உன்னத சொற்சித்திரமுமே.

கவிதை மனித சக்தியின் உன்னத விளக்கமாகும். "வாழ்வை வழங்குவது கவிதை" என்று கவிதா இன்பத்தில் திளையும் சுவாமிஜி அடுத்த இதழில் கவிதையைப் பற்றிய ஓர் அரிய கவிதையும், கவிதையும் விஞ்ஞானமும் என்ற தலைப்பில் ஓர் ஆராய்ச்சி வியாசமும் அளிக்கிறார் மோகினி அன்பர்களுக்கு. கட்டிக்கனிரஸம்போன்ற கவிதையும், சொல்லோவியமும் பெரு விருந்தளிக்கும்.

—ஆசிரியை

# சிறுவர் விவாகத் தடைச் சட்டம்

## சில குறிப்புக்கள்

இந்தச் சட்டம் சிறுவர்களுக்கு விவாகம் செய்துவைப்பவர்களைத் தண்டிப்பதற்காக ஏற்பட்டதே யன்றி, ஏற்கெனவே தெரிந்தும் தெரியாமலும் நடந்துபோன விவாகங்களை ரத்து செய்வதற்காக இல்லை. இந்தச் சட்டத்தை லட்சியம் செய்யாது சட்டத்தை மீறி நடத்தும் விவாகங்களைச் 'செல்லுபடியாகாதவை' என்று சொல்வதற்கும் இந்தச் சட்டத்திற்கு அதிகாரம் இல்லை.

இப்பொழுது இந்தச் சட்டத்தைப் மின்னும் சீர்திருத்த விரும்புகிறார்கள் சிலர். 'இந்தச் சட்டம் வந்தும் சிறுவர்கள் விவாகம் நடந்துகொண்டுதான் வருகிறது. அதை இன்னும் பலமாகத் தடைசெய்யவேண்டும்' என்பது சிலர் அபிப்பிராயம். சில சீர்திருத்தக்காரர்கள் 'பெண்ணின் விவாக வயதைப் பதினாக உயர்த்த வேணும்' என்கிறார்கள். இப்பொழுது யாதொரு சீர்திருத்தமும் அவசியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது.

இந்தச் சட்டம் முதல் முதல் வந்தபோது, சுதேச சமஸ்தானங்கள் இந்தச் சட்டத்தின்கீழ் வரவில்லை. ஆனபடியால், பலர் புதுச்சேரி, மைசூர், திருவாங்கூர், பரோடோ, முதலிய இடங்களுக்குப்போய், இந்தச் சட்டத்தைமீறிச் சிறுவர் விவாகம் நடத்திவந்தனர். 1938-ம் வருஷத்திய திருத்தத்தின் பிறகு, பிரிட்டிஷ் அரசாங்கப் பிரஜை எங்கிருந்தாலும் அவர்களை இந்தச் சட்டம் பாதிக்கும் என்று வந்தபடியால், இப்பொழுது சுதேச ராஜயங்களில் போய்ச் சிறுவர் விவாகம் நடத்துவது நின்றுவிட்டது.

'விவாகப் பெண்ணுக்குப் பதினறு வயது பூர்த்தியாக வேணும்' என்று இருப்பதினால், அதை 'ருதுமதி' விவாகம் என்றே சொல்லவேணும்.

இந்தச் சட்டத்தின்படி 'ருதுமதி' விவாகப் பிரசினை தீர்ந்துவிட்டபடியால், இப்பொழுதெல்லாம் பெண்களைப் பதினறு, பதினெட்டு, இருபது என்றுகூட வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். அவசரம் என்ன இனிமேல்? கொஞ்சங் கொஞ்சமாக இந்துக்கள் சிறுவர் விவாகத்தைக் கைவிட்டுவருகிறார்கள் என்பது நன்ருகத்தெரிகிறது. அதிதீவிர வைதிகர் குடும்பங்களிலும் பெண்கள் பதினறு, பதினெட்டுவரை விவாகமாகாமலிருப்பது சகஜமாகிவிட்டது. இன்னும் சில வருஷத்திற்குப் பிறகு இந்தச் சட்டத்தின் அவசியமே இராது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஆனல் இங்கிலாந்திலே இந்தச் சட்டத்தின் அவசியம் ஏற்படலாமென்று தோன்றுகிறது, சில வருஷங்களுக்குப் பிறகாவது. ஏனென்றல், இப்பொழுது இந்தியாவை விட்டுத் தம் நாட்டிற்கு சென்றுள்ள மாஜிவைசிராய், லின்லித்கோ இங்கிலாந்தில் அபூர்வமாகக் குழந்தைகள் உண்டாவதையும், இந்தியாவிலே வருஷத்திற்கு லட்சக்கணக்கில் குழந்தைகள் உதிப்பதையும் பார்த்து, பால்யவிவாகத்தின் பயனே இந்தப் 'பிரஜா அபிவிருத்தி' என்று தீர்மானித்துவிட்டாராம். அங்கே, இங்கிலாந்திலே, அவர் பால்ய

விவாகத்தைப் பிரசாரம் செய்வதாகக் கேள்வி. யுத்தத்தால் இழக்கும் பிரஜைகளை ஈடுசெய்வதற்காக அது எப்படியாவது போகட்டும். இனி, நம் நாட்டிலே இந்தச் சட்டம் ஏதோ ஒரு பழைய துர்வழக்கத்தின் சமாதி போலச் சட்டப் புஸ்தகத்திலேதான் பிர திஷ்டையாகியிருக்குமேயன்றி, நடவடிக்கை உலகில், அதைப் பிரயோகிக்கும் அவசியமே ஏற்படாது என்று திடமாகச் சொல்லலாம்.

---

# நன்றி

23 DEC 1944

ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி, ஆர். ஸ்ரீனிவாசன்

மற்றவர்கள் நமக்குச்செய்த உதவிக்காக எப்பொழுதும் அவர்களை நாம் நினைத்துக்கொள்வதுதான் நன்றி எனப்படும். இதனல் உதவியாளரின் உள்ளமும் குளிரும். உலகில் ஒவ்வொருவரிடத்திலும் 'நன்றி' எனப்படும் இந்த சிறந்த குணம் இருப்பது அவசியம். ஒவ்வொருவரும் சாப்பாடு, துணிமணி, வாழ்க்கை, அறிவு எனப்படும் சகலமான விஷயங்களிலும் பல பெயர்களின் பற்பல உதவிகளைப்பெற வேண்டியிருப்பதால் மனிதன் ஏதாவதொரு விதத்தில் இதராளின் உதவியை நாடவேண்டி ஏற்படுகிறது. ஆதலால் அவன் உதவியாளருக்கு நன்றி செலுத்தவேண்டிய அவசியமேற்படுகின்றது. இந்த குணம் இல்லாதவனின் ஜன்மம் பாழ்.

நாம் எவரிடத்திலாவது ஏதாவதொரு உதவி பெற்றல், தக்க சமயம் வாய்த்தபொழுது அன்னருக்கு நம்மாலியன்ற உதவியைச்செய்வது நம் கடமை. ஆனல் நாம் அவ்விதம் கைம்மாறு செய்து விட்டதினல் நம் கடமை தீர்ந்து விட்டதென்று எண்ணப்படாது என்றல்—நாம் எவ்வளவுதான் பிரதியுபகாரம் செய்தாலுங்கூடச் சிலசமயம் நாம் பெற்ற உபகாரத்தில் அணுவுக்குக்கூட இணையில்லாமல்போவதுண்டு.

உதாரணமாக — நம் பெற்றேர்களின் விஷயத்தை எடுத்துக்கொள்வோம்—தாயாரானவள் நம்மைப் பத்து மாதம் சுமந்துபெற்று, பிறகு பாலூட்டி, தாலாட்டி, குளிப்பாட்டி, சீராட்டி, எவ்வளவோ வாஞ்சையுடன் வளர்க்கிருள். தந்தையானவர், நாளெல்லாம் வெயர்க்க விருவிருக்க உழைத்தோ, அல்லது புத்தி சிரமத்தைக் கொண்டு உழைத்தோ சம்பாதித்து நம் வாழ்க்கைக்கு அவசியமான அன்னகாரம் இத்யாதி சௌகரியங்களை உதவியாவது காக்கிருர். அல்லாமல் நமக்கு நன்னடத்தை கற்பித்து, கல்வி பயில்வித்து நம்மை நல்ல யோக்கியவான்களாக்க எவ்வளவோ சிரமம் எடுத்துக்கொள்கிருர். நமது அருமைப் பெற்றேர்கள், குழந்தைகள் ஆரோக்கியசாலிகளாகவும், புத்திசாலிகளாகவும், நன்னடத்தையுள்ளவர்களாகவும் ஆகிவிட்டால் அவர்கள் அடையும் ஆனந்தத்திற்கோர் எல்லையுண்டா! இதேபோல் குழந்தைக்கு ஏதாவது கெடுதலேற்பட்டாலும் மனம்தாளார் பெற்றேர். இவ்விதம் பெற்றேருக்குக் குழந்தைகள்பாலுள்ள வாஞ்சையின் குணத்தை எத்தகைய பிரதியுபகாரத்தால்தான் தீர்ப்பது சாத்தியம்! ஆனல் இதற்காக ஒன்றும் செய்யா

மல் சும்மா இருந்து விடுவதா? நம்மால் இயன்றவரைக்கும் பயபக்தியுடனும், வினயத்துடனும், சிரத்தையுடனும், அன்புடனும் அவர்களைக் காணவேண்டும். அவர்களை வயது காலத்தில் ஆதரிக்கவேண்டும். அவர்களால் நமக்குண்டான உதவிகளை நாம் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும்.


இவ்வாறே, குரு, கணவர் அனைவரிடத்திலும் அவர்களால் நமக்கேற்படும் உபகாரங்களை மறவாமல், நம்மால் இயன்ற பணிவிடைகளைச் செய்து நம் நன்றியைச் செலுத்துவது நம் கடமை.

உள்ளத்தினுள் மாத்திரம் நன்றி பாராட்டுவதைக் காட்டினும் காரியத்தின்மூலம் தெரிவிப்பது மேன்மை, அவ்விதம் தெரிவிக்காவிடில் மடத்தனமென்பார்கள். உதவியவர்பால் நமக்குண்டான அன்பை அல்லது பக்தியை வெளிப்படுத்துவதற்காக அவர்களுக்கு மனமார வந்தனம் செலுத்துவது, கையாலானவரைக்கும் பிரதியுபகாரம் செய்வது, இவ்வாறு பற்பலவிதங்களில் அவர்களுக்கு உபகாரம் செய்வதுதான் நன்றி.

கடைசி பக்ஷம் எவரிடமாவது ஏதாவதொரு அல்பமான சகாயம் பெற்றாலும் ஒரு உபசார வார்த்தையாவது சொல்லவேண்டும். ஆங்கிலேயர்களில் இந்த வழக்கம் ரொம்ப நன்றாக வழங்கப்படுகிறது. எந்த அற்ப மனிதனானாலுங்கூட சின்னஞ்சிறியதொரு உதவி செய்தாலும் கூட (Thanks) என்றவார்த்தையையாவது சொல்லாமலிரார்.

கேவலம் மிருகங்கள்கூட தனக்கு உதவியவர்கள்பால் நன்றி செலுத்துகின்றனவே. தனக்கு அன்னாகாரம் போட்டுப் போஷிக்கும் யஜமானிடத்தில் நாய், பசு, புறா முதலிய வாயில்லா ஜீவன்களே எவ்வளவோ நன்றி பாராட்டும்பொழுது உயிர்களிலெல்லாம் உசத்தியெனப்படும் மனித ஜன்மத்தில் நன்றி என்ற நல்ல குண மிருக்கவேண்டியது மிக அவசியமே.

---




சிலேடை—தந்தி (யானை) வருதல் —"குஞ்சரன்'

# மானங்காத்த மன்னன்

மாலை நேரம். வானைமுட்டும் மலைச்சிகரம். வீரன் ஒருவன் சிந்தனையிலிருந்தான். பக்கத்தில் தோழன் ஒருவன் நிற்கிறான்.

வீரன்:—அப்பாஜீ ! செலவுக்குப் பணமில்லையே! என்ன செய்வது ?

தோழன்:—என்ன மகாராஜா பணமில்லையா! நான் கவனிக்கவில்லை. பணம் இருப்பதாகவே நினைத்துப் பேசாமலிருந்தேன். இதோ ஒரு கொடியில் பணம்!

* * * *

தானா ஜில்லாவின் தலைநகரம் கல்யாணபுரம். "கல்யாண்" என்றழைப்பார்கள் அப்பிரதேச வாசிகள். புனாவிலிருந்து பம்பாய் போகும் ரயிலில் ஒருஜங்ஷன் அது. அந்நகரின் சுல்தான் மூலானா ஆமத். பீஜபூருக்கு கஜானா அனுப்பினான் சுல்தான். சிவாஜி 300 குதிரை வீரர்களுடன் போரிகணவாயில் எதிர்த்தான். வீரர்கள் மறைந்தனர். கஜானா சிவாஜி பக்கம். செலவுக்கு என்ன குறைச்சல்?

* * * *

இரு முஸ்லிம் வீரர்கள் சாலையில் சந்தித்து "கசுமூசு" வென்று ஏதோ பேசிக்கொண்டார்கள்,

"என்ன! அகமத்! காரியம் பழந்தானே!" என்றான் ஒருவன்.

"நான் போய்க்கூட விட்டு விடுவேனா?" என்று மார்தட்டினான் மற்றொருவன்.

மூன்றாவது பேர்வழி யொருவன் வந்து, "வேலைகளெல்லாம் முடிந்து விட்டன ! இன்னும் கொஞ்சநேரத்தில்..."என்று முடிப்பதற்குள் ஏதோ சத்தம் கேட்டதை உற்றுக் கேட்டார்கள் வீரர்கள்.

"சிவாஜீக்கு ஜே! என்ற மங்கள கோஷம் வானைப் பிளந்தது.

* * * *

"அப்பாஜி! சபாஷ்! உன் வீரமே வீரம். எங்கே சிறை செய்த சுல்தான் மூலானா ஆமத்" என்றான் சிவாஜி.

அப்பாஜி சோணதேவ், சுல்தான், மூலானா ஆமத்தைக் கொண்டு வந்து நிறுத்தினான். சிவாஜி அப்பாஜீயைத் தட்டிக் கொடுத்து "சுல்தானை வெகு மரியாதையுடனும், பந்தோபஸ்துடனும் பீஜபூருக்குக்கொண்டுபோ" என்று உத்தரவிட்டான். அப்பாஜியின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

இரவு மணி எட்டு. சிவாஜி எதிர்காலத்தைப்பற்றி "கோட்டை" கட்டினான். அவன் முன்னால் ஒரு பெண் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள்.

"அப்பாஜி! யார் இந்தப் பெண்மணி?" என்றான் அரசன்.

அப்பாஜி நகைத்தான். அந்த சிரிப்பிலே ஒரு அலட்சியம் தொனித்தது.

"இவள் மூலானாவின் மருமகள். கொள்ளையிலும், படையெழுச்சியிலும் கிடைத்த உயர்ந்த பொருள்களெல்லாம் அரசர்க்குரியதல்லவா?" என்று வாழைப்பழத்தில் ஊசி திணிப்பது போல் திணித்தான்.

"அம்மா! என் தாயார் உன் அழகில் பாதியேனும் இருந்திருப்பாளாயின் நான் இன்னும் அழகுடையவனாக விருப்பேன். ஆகவே நீ என் தாயுக்குச் சமானமானவள். பிரபஞ்சத்தில் எவன் எஜனை விருப்புகிறானோ அவன் பாதாள விருப்பம் கொள்ளான் "என்றுமிகவும்வணக்கமாகக் கூறிவிட்டு, "அப்பாஜி!

இந்தப் பெண்மணியின் சொந்தக்காரரிடம் கொண்டு போய்ச்சேர்'' ஜுள்ளார் சிவாஜி. அவர் முகத்திலே ஒரு தியாகியின் அழகு ஜொலித்தது.

*   *   *

நாடு பிடிக்கும் ஆசைகொண்ட அரசர்களிடமும், கொள்ளையடிக்கும் எண்ணம் கொண்ட கள்ளர்களிடமும், இந்த அருங் குணத்தைக் காண்கிறோம்.

தமிழ் மறவன் சந்தனத்தேவனிடமும் இத்தகைய் தயாளத்தைக் காண்கிறோம். சித்திரப் பாவையொத்த அழகிய வதனமுடைய மூலானு ஆமத் மருமகள் போன்ற பெண்களிடமும் இளமையும், பராக்கிரமும், ஜயமும் பெற்ற வீரனொருவன் தாய் பிள்ளை போல் நடந்து கொள்வது அரும் குணமல்லவா? இந்தப் பெருங்குணம் ஒன்றுதான் சிவாஜியை சிங்காசனம் ஏற்றி மகாராஷ்டிர சாம்ராச்யத்தை உண்டாக்கிற்று.

---

## சுலபமான வழி



கணவன்-அடியே! ஒரு யுக்தி செய்துவிட்டேன்! நான் எந்த கோர்ட்டிலேயும் வாதாடி ப்ரமாதமா என்பேர் பேப்பர்லே வரப்போறதில்லே. ஆனல் இப்போ தீர்மானம் பண்ணியிருக்கிற ப்ரகாரம், தினமும் என்பேர் அடிபட்டுண்டே இருக்கும்!

மனைவி-(ஆச்சரியத்துடன்) அப்பேர்ப் பட்ட யுக்தி உதயமாகிற நல்ல காலம் பிறந்துவிட்டதா?

கணவன்-கேளு என் யோசனையை! பாகிஸ்தான், திராவிடஸ்தான் கிளர்ச்சிகளைப்போல் நான் தென்னிந்திய பிராமணஸ்தான் ஏற்படவேண்டுமென்று கிளர்ச்சி செய்யலாமென்று தீர்மானித்திருக்கிறேன்!

—''விருச்சிகம்''

## நாம் கட்டுப்படவேண்டியது

# மனச்சாட்சிக்கா ? — உலகத்தோருக்கா?

### 1

ஸ்ரீமதி. எஸ். பாக்கியம்

“உலைவாயை மூடினாலும் மூடலாம்; ஊர் வாயை மூடமுடியாது” என்று பலர் அங்கலாய்த்துக்கொள்வதை நாம் அடிக்கடி பார்க்கிறோம். நாம் செய்யும் ஒரு சிறிய காரியத்தைப் பற்றியும் “நா(ன்கு)லு பேர் என்ன சொல்வார்களோ” என்று பலர் யோசனைக்குள்ளாகின்றனர். “உலகம் பலவிதம்” என்று தமக்குத்தாமே சமாதானம் கூறிக்கொள்வோரும் பலர் உண்டு.

இப்படி நர்ம் செய்யும் அல்லது செய்யப்புகும் பல காரியங்களையும் பற்றி அக்கரை கொண்ட இந்த ‘ஊரோ’ ‘நாலுபேரோ’ ‘உலகமோ’ யார்? என்பதை ஆராயவேண்டியது இந்த கட்டுரை சம்பந்தப்பட்ட மட்டில் அவசியமாகின்றது. உலகம் பூராவும் பரம்பொருளின் சிருஷ்டி என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆகவே தனிப்பட்ட ஒரு நபரின் நடவடிக்கையோ, போக்கோ, உலகத்தவரின் கவனத்தையும் கவருகிறது என்பதை நாம் மறுக்கமுடியாது. ஒரு மனிதன் உலகத்திலிருந்துதான் வாழுகிறான். ஆகவே அவன் உலகத்தை பூராவாகப் புறக்கணித்துவிடமுடியாது.

மனிதன் முக்கியமாக வாழ்வது தனக்காகத்தான்என்பது ஓரளவில் உண்மையெனக்கொண்டாலும் தன்னலமற்ற மகான்கள், ஆழ்வார் ஆசாரியர்கள், நாயன்மார்கள், தம்மை சுயநலமற்ற முறையில் உலகத்திற்கே சமர்ப்பணம் செய்துகொண்டு உலகத்தின்முன்னேற்றத்திற்கேபாடுபட்டு வந்திருக்கின்றனர்.

ஆதிகாலந்தொட்டு இப்படிப்பட்ட தியாகிக்ள் நம் புனிதநாட்டில் இருந்திருக்கின்றனர். புறாவுக்காக தன் மாமிசத்தை அறுத்துக்கொடுத்த சிபி சக்ரவர்த்தி என்ன! பாம்பிற்கே தன் உயிரையே கொடுத்த ஜீமூதவாகனன் என்ன! எலும்புகளைத் தந்த ததீசி மகரிஷி என்ன! தன் தோலுடன் உடன்பிறந்த குண்டலங்களையே தந்த தான சூரனான கர்ணன் என்ன! இவர்கள்போன்ற மகான்கள் தம்மை பூராவாக உலகத்திற்கே சமர்ப்பணம் செய்தனர்.

ஆனால் பொதுமக்களான நாம் பெரும்பாலோர் அத்தகைய ஒப்பற்ற தன்னலமற்ற சேவைக்கோ தியாகத்திற்கோ பல காரணங்களால் ஈடுபடமுடியாது. அவரவர்களுக்குத் தங்களைக் கவனித்துக் கொள்ளவும் தங்கள் பெண்டுபிள்ளைகளுக்கு ஊதியம் தேடி வைப்பதிலும் பாடுபடவே ஆண்டவன் தந்த ஆயுள்போதுவதில்லை; ஆகவே இந்தக் கட்சியைச் சார்ந்த நாம் நான் மேலே கூறிய லட்சியத்தின்படி உலகத்தாருக்கு தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது. ஆகவே இப்படிப்பட்டவர்கள் தங்கள் மனச்சாட்சியின்படி தங்கள் நலன்களைப்பற்றிப் பாடுபடுகையில், மற்றவருக்கு துன்பமோ, நஷ்டமோ ஏற்படாதபடி நடந்துகொள்ளவேண்டியது அவசியம். இது மற்றவருக்கு கட்டுப்

படுதல் ஆகாது. தனி சுதந்திரம் நாடி நிற்கும் ஒரு நபர் பிறர் சுதந்திரத்தையும் தான் அபகரிக்காத முறையில்தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளவேண்டியவனாகிறான்.

இந்த நியதி தனிப்பட்ட நபர்களுக்கு மட்டுமன்றி நாடுகளுக்கும், பெரிய சாம்ராஜ்யங்களுக்கும்கூட கட்டுப்பட்டதாகும். தனிப்பட்ட மனிதரின் மனச்சாட்சிக்கொள்கையை ஒரு தேசத்தின் விஷயத்தில் கைக்கொண்டால் இப்பொழுது நடப்பதுபோன்ற மகத்தான யுத்தங்கள் நடைபெறமாட்டா.

மனச்சாட்சி என்பது பகுத்தறிவுடைய மனிதனின் மனதிலுள்ள சீர்தூக்கிப் பார்க்கும் ஒரு திராசு ஆகும். எந்த காரியமும், பெரிதோ, சிறிதோ மனச்சாட்சி எடைபோட்டுப்பார்த்து மனிதனுக்கு நல்ல வழியைக் காட்டுகிறது. திருடவோ, பொய் சொல்லவோ, கட்டிய மனைவியைக் கைவிட்டு பரத்தையரிடம் செல்லும்போதோ, தன் தருமத்தைக் கைவிடும்பொழுதோ மனச்சாட்சி உறுத்துகிறது. சாதாரண மனிதன் அதை உதறிவிட்டுக் கெட்டவழி செல்லமாட்டான். கெட்ட சகவாசத்தின் பயனாக படிப்படியாக் மனங்கெட்டுவிட்டால்தான் மனச்சாட்சி மீறி மனிதன் கெட்டவனாகிறான். மனிதன் கெட்டுப்போகாமலிருப்பதற்கு மனச்சாட்சி ஒரு துல்லியமான, ஆனால் மிகவும்பயனுள்ள ஒரு பந்தோபஸ்தும் தற்காப்பு ஆயுதமுமாகும்.

நம்மில் பலர் தமக்காக இல்லாவிட்டாலும் "நாலுபேர் சொல்லப்போகிறார்களே' என்று உலகததாருக்குப் பயந்து கெட்ட நடவடிக்கைகளில் இறங்குவதில்லை. பிறர் காண பலர் குடிக்கவோ,குச்சு நுழையவோ மாட்டார்கள். சொந்த மனைவியேயானாலும் பிறர் காண அருவருப்பான அல்லது கண்ணியமற்ற முறையில் நடந்துகொள்ள மாட்டார்கள். கலியாண விஷயங்களில்கூட தகாத சம்பந்தம் செய்தால் உலகத்தார் என்ன சொல்வார்களோ என்று நல்ல எண்ணத்துடன் யோசிக்கவேண்டி வருகிறது. ஆகவே உலகத்தாருக்குக் கட்டுப்படுதலும் பலவிதங்களில் ஒரு அவசியமான நன்மையாகவோ (தீமையாகவோ) இருக்கக்கூடும்.

ஆனால் மனச்சாட்சிக்கு உகந்த சில காரியங்களை உலகத்தாருக்குப் பயந்துகொண்டு செய்யாமலிருக்கலாமா என்ற கேள்வி தானாகவே ஏற்படுகிறது. தருமத்தின் உருவம் எளிதில் கண்டுகொள்ள முடியாது. அது சூட்சுமமானது. முரண் ஏற்படும்விஷயத்தில் 'எந்ததருமத்தினால் குறைந்த கெடுதி ஏற்படுமோ அதை செய்' என்று சாஸ்திரமே கூறுகிறது. கொலைகாரனான ஒருவனால் துரத்தப்பட்ட ஒரு எளியவன் ஒருவனிடம் அடைக்கலம் புகுகிறான். கொலையாளி வந்து தேடுகிறான். அப்பொழுது அடைக்கலம் புகுந்தவனை காட்டிவிட்டால் உடனே கொலை ஏற்பட்டு ஒரு உயிர் போகிறது. இல்லை என்றால் சத்தியத்திற்கு பங்கம் ஏற்படுகிறது. ஆகவே ஒரு உயிரைக் காப்பதே உயரிய தருமமாகக் கருதப்பட்டு பொய் சொல்ல நேரிடலாம்.

மனச்சாட்சிக்கு முடிந்தமட்டும் முரண்படாமலும், உலகத்தோரை புறக்கணிக்காமலும் செய்வது உத்தமமாகும். எக்காரணத்தைக்கொண்டும் தரும சங்கடத்தில் தவிர, மனச்சாட்சியின்படி நடப்பதே சரியான மார்க்கமாகும்.

ஆனால் தன் மனத்தில் படாமல், கபடமாகவோ, டம்பமாகவோ, உல

கத்தாருக்கு கட்டுப்படுதல்போல் வெளிக்குக் காண்பித்து, மாயப் பொடி தூவி, மனச்சாட்சியையும் விற்று தருமம் செய்வதுபோல் நடிக்கும் கபட நாடகதாரிகளின் சுய நலக்காரியங்கள் மிகவும் வெறுக்கப் படவேண்டியதாகும். அது மனச் சாட்சிக்கும் ஒவ்வாது. உலகத் தோரையும் ஏமாற்றுவதாகும். ''கழுதையும், சிறுவனும்' என்ற கதையில் போல் ஒருவன் உலகத் தில் ஒவ்வொருவரையும் திருப்திப் படுத்த முயற்சிப்பது நடக்காத காரியமேயாகும். மனிதனுக்கு மனச் சாட்சியே ஆண்டவனளித்த பொக் கிஷம். அதற்கு கட்டுப்பட்டே நாம் நடக்கவேண்டும். நாம் முடிந்தமட் டில் நம்முடன் வசிக்கும் உலகத் தோரையும் புறக்கணிக்கமுடியாது.

## 2

*ஸ்ரீமதி கி. ஜெயலக்ஷ்மி*

மனச்சாட்சி ஒரு நீதிஸ்தலம். நம்மையறியாது ஒரு குற்றம் செய் தாலும் நம் மனமே நம்மைக் கண் டித்துத் தண்டிக்கின்றது. அதற்குப் பரிகாரம் செய்துகொள்ளவும் தூண்டுகிறது.

ஒரு ஸாமானைத் திருடிவிடின் அவர்கள் மனமே தண்டிக்கிறது. உடனேயோ சில நாள் கழித்தோ, உண்மையை உரைக்க வெட்கி, சிலர், குழந்தைகளோ, காக்கையோ, கொண்டுபோட்டதாகக் கூறி தப்பிக் கப் பார்க்கிறார்கள். சிலர், தானே செய்துவிட்டதாக ஒப்புக்கொண்டு, மன்னிக்கவேண்டுகிறார்கள்.

சிலர் ஒருவரைக் கெடுத்துவிடு கிறார்கள். பிறர் அறியாமலிருந்தா லும் அவர்கள்மனமே நாளடைவில் வருந்தி, தன்னால் கெடுக்கப்பட்ட குடும்பத்திற்கு, இயன்ற உபகாரம் செய்கிறார்கள். அப்படியிருந்தும், அதே ஏக்கத்தால் நோயாளியாக வோ, சித்தப்ரமையாகவோ மிகுந்த துன்பப்படுகிறார்கள்.

கடமையைச் செய்ய பின்னடை யாதே, என்ற வாக்கின் படி துரோண, பீஷ்ம, க்ருபர் முதலிய மஹான்கள், பாரதயுத்தம்தொடங்கு கையில், தங்கள் பக்கம் நியாய மில்லை என்றும், தருமமே ஜெய மளிக்கும். மேலும், விஜயத்வஜனை பார்த்தனுக்கு, பகவானே ஸாரத்யம் செய்கையில் ஜெயம் வேறுவிதமாக இருக்க முடியுமா? என்றும் அறி யாதவர்களா? கர்ணனும் பிறப்பே தெரியாதிருந்து, குந்திதேவியாலும், கண்ணனாலும் தெரிந்தும், பாண்டவ ருடன் தானும் சேர்ந்து ஜயித்து, ஸகோதரர்களுடன் ராஜ்யம் ஆள லாம் என்ற ஆசை அவன் மனதில் உதிக்கவே இல்லை. கோபாலன் எவ் வளவோ சொல்லியும், அவன் மனச் சாட்சி தன் நண்பனுக்கு துரோகம் செய்ய சிறிதும் ஒப்பவே இல்லை. ஸகோதரர்கள், தாய், இவர்களைவிட தன் நண்பனுக்கே, கடமையையும், உயிரையும் செலுத்த உறுதியாக நின்றான். மனச்சாட்சி என்றாலும் இப்பேர்ப்பட்ட உறுதியல்லவோ வேண்டும்.

நல்லத்திற்கு இடமளிப்பதும் மனச்சாட்சியே, தீய தொழில்களில் ப்ரவேசிக்கச் செய்வதும் அதுவே அயோத்யாபுரி அரசனை ஹரிச்சந் திரனை, ஒரு பொய்யின் பொருட்டு, எவ்வளவுதான் கஷ்டத்திற்குள் ளாக்கியும், அவன் மனச்சாட்சி பொய்சொல்ல ஒப்பவில்லை அல் லவா? உலகில் கோயில் குளம் கட்டுதல், அன்னதானம் செய்தல் முதலிய திருப்பணிகள் செய்வதாக, யாசகாவ்ருத்தி செய்து ஏராளப் பொருள் திரட்டுகிறார்கள். அந்தச் தொகையை, அப்படியே எடுத்துக்

கொள்ள மனமொப்பாமல் மிகவும் சிறிய தொகையை தானம் வழங்கிவிட்டு, பாக்கியை எடுத்துக்கொள்கிறார்கள். இன்னும் சிலரோ முழுவதும் தானே எடுத்துக்கொள்கிறார்கள்.தர்ம ஸொத்தை அபஹரிக்கலாமா?பகவான் பொறுப்பாரா? நம் குடும்பம் விளங்குமா? ஏன் இம்மாதிரி செய்யவேண்டும். நியாயமான வழியில் பொருள்திரட்டினலென்ன? இம்மாதிரி செய்யவேகூடாது, என்று ஒரு மனம் பூதபயம் காட்டுகிறது. இன்னொருமனம் ஆமாம், பாபமாவது, புண்யமாவது தானதருமம் என்கிறதுதான் ஓடி ஒளிந்துவிட்டதே. திருப்பணி என்றவுடன் கொஞ்சமாவது கொடுத்தவர்கள், பசிப்பிணி என்று கேட்டால் கொடுப்பார்களா? பகவானல் சிருஷ்டிக்கப்பட்ட வயிறு அவர் பெயரால் வந்த த்ரவியத்தால் சாப்பிடுகிறது. பகவானுக்கும் இது த்ருப்தியாகவேதானிருக்கும். இனிமேல் வேண்டுமானல் இம்மாதிரி செய்யவேண்டாம்.' என்று வெகு தாராளமாக சமாதானம் செய்துவிடுகிறது.

உலகத்தோருக்கு, கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்பது ஸுலபமான காரியமல்ல. அதன்பொருட்டு, தன் தேகச்ரமமோ, மற்றும் எந்தவிதமான ச்ரமமாக இருந்தாலும் பட்டு,எப்பேர்ப்பட்ட த்யாகமாயிருந்தாலும் சலிக்காது செய்யும், ஆற்றலுடையவர்தாம் தேசத்தோருக்கு கட்டுப்படமுடியும். மேலும், உலகத்தோடு கட்டுப்பட்டு நடக்கவேண்டும், அதுதான் சரியானது! என்று மனச்சாட்சி கூறவேண்டும். எதற்கும் மனச்சாட்சி, இடமளிக்கவேண்டும். மனச்சாட்சி, நீர்ஊற்றுப் போன்றது. ஊற்று நீரை இரைக்க இரைக்க, நீர் சுத்தமாக ஊறுவது போல், மனச்சாட்சியானது, நம் செய்கையை, ஒரு தரம் கண்டிக்க ஆரம்பித்தால், அதற்கு விரோதமில்லாமல் நடந்தால், மறுபடியும், நம் மனது, கெட்ட வழியில் எண்ண ஒட்டாமல், அது தப்பு, என்று பறையறிவிக்கும். மனச்சாட்சி என்பது, ஒரு மனிதருக்கு ,கண்டிக்கத் தலைப்பட்டால் அவர் அதன் அனுமதியின்றி ப்ரவேசிக்கமாட்டாராதலால், கூடியவரை தப்பு வழி ப்ரவேசிக்கவிடாமல் காப்பாற்றும். ஆனல் அது எழும்போது, ஸமாதானம் பண்ணிக்கொண்டுவிட்டால் பலனில்லை.

சிலருக்கு மனச்சாக்ஷி, 'தெரியாமல் தானே செய்தோம்; அதனல் பாதகமில்லை' என்று சும்மா இருக்க விடுவதில்லை. தனக்குத்தானே தண்டித்துக்கொள்ளும் மட்டும், அது துன்புறுத்தியே வரும்.

ஒரு ஊரில் இரு ஸகோதரர்கள் இருந்தார்கள். அண்ணன், தம்பியை மிகவும் துன்புறுத்தி வந்தான். அவர்களுக்கு கொஞ்சம் சொத்துமிருந்தது. தம்பிக்கு விவாகமாயிற்று. அண்ணனல் துன்பப்பட்ட தம்பி, பொறுத்துப் பார்த்து முடிவில் பொறுக்கமுடியாது, அண்ணனைப்பார்த்து, அண்ணா! தயவு செய்து என் பாகத்தை பிரித்துக் கொடுத்தால், நான் வெளியூர் சென்று பிழைக்க எண்ணுகிறேன் என்றான். இதைக்கேட்ட அண்ணன் "என்ன? பாகம் வேண்டுமா! அழகுதான். இருந்த கொஞ்சம் சொத்தையும், உன்பொருட்டு சிலவழித்து, நானே கடனாளியாயிருக்கிறேன். கணக்குப் பார்த்தால், நீதான் எனக்கு கொடுக்கவேண்டும், இனி நன்றிகெட்டவர்களுக்கு, என் வீட்டில் இடமில்லை. நீ வெளியில் செல்" என்று கூச்சலிட்டான்.

இதைக்கேட்ட தம்பி, மிகவும் வருந்தி, பதில் வார்த்தையில்லாமல் கையில் காசில்லாமல், கட்டிய துணியுடன், மனைவியுடன் கிளம்பினன்.

வேறு ஊர் சென்று முதலில் பிறர் நிலத்தைஉழுது பயிரிட்டு, நாளடைவில் விருத்தியாகி, தானே சொந்த நிலம், வீடு முதலியது பெற்று மிராசுதாரரானன்.

அண்ணனே, மழை இல்லாமையால் விளைச்சலின்றி, மிகுந்த கஷ்டத்துடன் சொத்து முழுவதும் கரைந்து, சாப்பாட்டிற்கும் வழியின்றி, வெளியூர்களுக்கு பிழைக்கப்போனன்.

ஒருநாள் தன்னிடம் வேலைக்கு வந்தவர்களில், அண்ணனும் இருக்கக்கண்டு, அவன் நிலைக்குப் பெரிதும் வருந்தி, அவன் குடும்பத்தை மரியாதையுடன்வைத்து காப்பாற்றினன். அண்ணன் சிலநாள் ஸாதாரணமாக இருந்தான். நாளடைவில் அவன் மனம் அவனை சித்ரவதை செய்ய ஆரம்பித்தது. "நீ அவனை துன்புறுத்தி, ஸொத்தைஅபஹரித்து விரட்டியும் அடித்தாய். அவன், தானே ஸம்பாதித்து, உன் குடும்பத்தையும் காப்பாற்றுகிறன். இப்பேர்ப்பட்டவனுக்கு துரோகம் செய்தாயே, நீ நன்றிகெட்டவன? அவன் அவன் நன்றிகெட்டவன? பார்'' என்றது.

ஒருநாள் அண்ணன் 'தம்பி! நான் உன்னைக் கை விட்டாலும் நீ எங்களை வைத்துக் காப்பாற்றுகிறய். ஆனலும் இங்கிருக்க என்னை வெட்கமும், துக்கமும் பாதிப்பதால் வெளியூர் சென்று பிழைக்க எண்ணுகிறேன்'' என்றன். தம்பி எவ்வளவு சொல்லியும் கேட்காததால், வேண்டிய த்ரவியத்தைக் கொடுத்து, "அண்ண! இதை தட்டாமல் எடுத்துக்கொள். நீ அப்படி அப்போது அனுப்பியிராவிட்டால், உன்னேடு நானும் இருந்து ஸொத்தும் கரைந்தால், இப்பொழுது, நானே ஸொத்து சேர்த்து, உன் கஷ்ட ஸமயத்தில் உதவிசெய்யும் பாக்யமிராது. எல்லாம் நல்லதிற்கே நீ வருந்தாதே. அடிக்கடி உன்னைப் பார்ப்பேன்'' என்று வழியனுப்பினன்.

என்னே மனசாட்சியின் அதிசயம்!

பக்தி என்பதும், உலகத்தோருக்காகச்செய்வதில்லை. மனசாட்சிக்கு தகுந்தபடி மனசாட்சிக்குக்கட்டுப்படவேண்டிய காரியங்களும் இருக்கின்றன. உலகத்தோடு ஒத்து, செய்யவேண்டிய காரியங் க ளு ம் இருக்கின்றன. மன ஸா ட்சி க் கு பயந்து நடந்தோமேயானல், பலவித நன்மைகளுண்டு. உலகத்தில் மனசாட்சிக்கு கட்டுப்படாத மனிதர்களே இருக்கமாட்டார்களென்று சொல்லலாம். எல்லாவற்றிற்கும் பயப்படாவிட்டா லும், ஏ தா வ தொன்றுக்காவது, பயப்படுகிறர்கள். 'என் மனசாட்சி குற்றமே செய்யவிடாது. அதனல் என் மனசாட்சிப்படி நான் நடப்பேன் ஒருவருக்காவது விரோதம் செய்யவிடாது'' என்றுசொல்லிக்கொண்டிருப்பதில் பலனில்லை. அதை அவரவர்கள் நடத்தையில் காண்பிக்க வேண்டும்.

---

அடுத்த கட்டுரைப் போட்டிக்கு:-

## ரஸனை

ரஸிகத்தன்மை என்பது தானக அமையும் குணவிசேஷம். நல்ல படிப்பாளியாயிருக்கும் ஒருவருக்குப் பல விஷயங்களில் ரஸனையே இருக்காது. கையெழுத்துகூட போடத்தெரியாதவன் பல அம்சங்களில் பெரிய

## பி. ஆர். ராஜசூடாமணி

### சிறையில் அடைபட்ட குருவியின்
### விண்ணப்பம்

சின்னஞ் சிறு குருவி நானிந்தச்
சிறையில் அடைபட்டேன்;
வண்ண வெளிவானில் பறக்கநல்ல
வாழ்வை இழந்துவிட்டேன்.

எந்தை எனதன்பன் என்கண்ணை
இருக்கச் செய்தவனை
இந்தச் சிறைதனிலே நாள்தோறும்
இருந்து பாடுகிறேன்.

தாயாய் எனைப் பெற்ற அன்பனவன்
தயவாய்ச் சிறையிலிட்டால்!
வாயால் ஏது சொல்வேன்? வரதா! உன்
வழிகள் விந்தை என்பேன்.

வைத்த கம்பி சூழ்ந்த சிறையகன்று
வெளியேற வழியில்லேன்;
நித்தம் சிறகு கட்டும் கயிறறுத்து
நீந்தும் திறனில்லேன்.

எத்தனை தூரமென்னைச் சிறையிலிட்டு
இருக்கச் செய்திடினும்,
நித்திய மாயிருக்கும் ஆத்மனையார்
நிறுத்தி வைக்கவல்லார்.

ஆத்மா சிறைப்படாமல் பறந்து போகும்,
அத்தன் பாதம் சேரும்;
காத்த சிறை எனக்குக் கடவுளையே
காணும் இடமென்பேன்.


---

ரஸிகனாக இருக்கிறான். இதைக் கண்கூடாகக் காண்கிறோமல்லவா? ரஸனையில் பல விதம் உண்டு...
எங்கே, உங்கள் கற்பனையைப் பார்க்கலாம்! —ஆசிரியை

# போட்டோ பகுதி


வை. மு. ஸ்ரீ.

183096.



## தஞ்சை அரண்மனை

ஒரு காலத்தில் தஞ்சை ராஜ்யம் சரித்திரப்பிரஸித்தி பெற்று விளங்கி நின்றது. கலைக்கும் கல்விக்கும் பேராதரவளித்தது. இன்று தஞ்சை அரண்மனை அந்தப் பழையகாலத்தை நினைவுறுத்துகின்றது. அரண்மனையைச் சேர்ந்த ஒரு பகுதியின் படமே இது. விலைமதிப்பற்ற ஸம்ஸ்க்ருத ஏட்டுப் பிரதிகளும், நூல்களும் இக்கட்டடத்தையடுத்துள்ள பகுதியில் சர்க்காரால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.



## கண்டதுண்டோ ?

திருவெள்ளரை க்ஷேத்திரத்தில் ஸ்ரீ புண்டரீகாக்ஷன் சந்நிதிக்குப் பின்புறமுள்ள கல்வெட்டுக் குகை. இங்கு தவம் செய்த ரிஷிகளுக்குத்தான் ஸ்ரீபுண்டரீகாக்ஷர் சேவை சாதித்து அருளினராம்,

# மதிப்புரை

ஸ்ரீமான். வி. ஸி. கோபாலரத்னம் எழுதிய

## ஹாஸ்ய நாடகங்கள் — கட்டுரைகள்

தினமணி வெளியீடு. ரூ. 2.

சர்க்கார் கருணைகூர்ந்து தினமணி காரியாலயத்தாரை தங்கள் விசேஷ வெளியீடுகளுக்கு நியூஸ் ப்ரின்ட் உபயோகப்படுத்த அனுமதித்ததன் பலனை இந்த நூலில் காண்கிறோம். ஆழ்ந்த நகைச்சுவையையும், அரிய கருத்துக்களையும் உலக அனுபவங்களையும் தாங்கிய இந்த ரஸமான நூல் 276 பக்கங்கள் கொண்டிருப்பினும் ரூ. 2/- வீதமே விற்கப்படுவது சர்க்கார் காட்டிய தயையின் பலன்தான். படங்களில்லாவிடினும், வேறு எந்த பேப்பரில் அச்சிட்டிருந்தாலும் விலை கூடுதலாகவே இருக்குமென்பது எல்லோரும் அறிந்த விஷயம்.

நூல் எவ்வளவு அழகாயிருக்கிறதோ அவ்வளவு ரஸமாக இருக்கிறது ஸ்ரீ. எஸ். ஒய். கிருஷ்ணஸ்வாமி, ஐ. ஸி. எஸ் அளித்துள்ள முன்னுரை. அழகுக்கு அழகு செய்வதுபோலிருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது. எல்லோரும் படித்து மகிழ வேண்டிய நூல். அருமையாகத் தொடுத்துள்ள பதிப்பாசிரியர் தமிழன்பர்களின் பாராட்டுதலுக் குரியவரல்லவா ?

## பாரதமணி பூஜாமலர்

தினே தினே பாரதமணியின் இலக்கிய எழில் ஓங்கிவருவது மகிழ்ச்சியை அளிக்கிறது. ஸ்ரீ. வேங்கடரமணி தற்போது ஒரு புதிய வெற்றியை அடைந்திருக்கிறார். மலர்கள் வெளியிடுவதென்றால் (நம் தமிழுலகில்) படப்பொலிவுடன் வெளியிடுவதே சம்பிரதாயமாக வந்துள்ளது: ஆனால் படங்களின்றியே, விஷயச் சிறப்புடனே ஒரு மலரை வெளியிட்டு வெற்றி பெற முடியுமென்பதை ஆசிரியர் நிரூபித்துவிட்டார். பலதரப்பட்ட எழுத்து மலர்கள் மட்டுமே கலைவாணிக்கு அர்ச்சிக்கப்படுகின்றன இவரது பெருமுயற்சியால்; இதனால் தான், விஷயம் நிறைந்த இம்மலரை மிகவும் குறைந்த விலைக்கு (ரூ.1/-) கொடுக்கமுடிந்தது.

'போகிறபோக்கில்' இவர் தனது லட்சியப்பாதையில் ஒரு 'அடி' அடித்துவிட்டார் ! சபாஷ் !

—வை.மு.ஸ்ரீ. எம்.ஏ.,பி.எல்.

---

# உதயசூரியன்

ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் முகவுரையில் குறிப்பிடுகிறார் :-

உதயசூரியன் வை. மு. ஸ்ரீயின் முதல் நாவலாயிருந்தும் முதல்தரமாக அமைந்திருக்கிறது, முதல் வரியைப் படித்தால், வாசகர் கடைசி வரி வந்ததும் 'இன்னும் கதை நீளாதா' என்னும்படி காட்சிப்படலங்கள் விறுவிறுப்பாகச் செல்லுகின்றன. எளிய நடை, உள்ளத்திலிருந்து வந்த சொற்கள், நவரஸபாவனைகள், விரசமில்லாத காதல் ரஸம், கம்பீரமான வீரச்சுவை, உலகியல்பின் மேடுபள்ளங்களைச் சித்திரித்துக் காட்டும் அனுபவத்திறமை —ஆகிய கதையிலக்கணங்களெல்லாம் உதயசூரியனுக்குக் கிரணங்களாக அமைந்திருக்கின்றன.

## 21

அமராபாய் படுக்கையில் விழுந்ததும், அவளுடைய எண்ணம்பூராவும் அகிலாவின்மீதே பாய்ந்தது. ஆஸ்பத்திரியிலிருந்து மறைந்தவள், பிறகு ஒருவிதமான தகவலும் இல்லாததால் இருக்கிறாளா, இறந்துதான் போய்விட்டாளா என்ற சந்தேகமும் உண்டாகியதால் அதுவே ஏக்கம் பிடித்துவிட்டது.

"என்னுல்தானே அக் குடும்பம் சிதறிவிட்டது. நன்மையை நினைத்து நான் கற்றுக் கொடுத்த கை வேலைகளினுலல்லவா அவர்களுடைய வாழ்வே சிதறியது. இந்த மகத்தான பாவத்திற்கு நான்தானே காரணமாகிவிட்டேன். நான் அவர்களைக் கேட்காமல் ஏன் அந்த பொருள்காட்சியில் அவைகளை வைத்தேன். இது குற்றந்தானே!...

குற்றமா! குற்றமா! இதுவா குற்றம்? இந்த வேலைகளின் மகிமையால் பரிசுகள் பெற்றதோடு அந்த ஏழைப் பரதேசிப் பெண்ணுக்கு ஒரு ஆதரவாயும் இருக்கும். பிழைக்க வழியும் ஆகும். நாமே நம் கைச்செலவில் ஒரு தையல் மெஷினையும் நூல்வேலைகள் பிரம்பு வேலைகள் முதலியவைகளுக்கான சாமான்களையும் வாங்கிக்கொடுத்து அவளை ஆதரிக்கவேண்டும் என்கிற நல்ல எண்ணத்தை கடவுளறியச் சத்யமான உண்மையுடன் செய்தது இத்தகைய விபரீதமாகவா போய்விட்டது! நன்மையைச் செய்ததற்கு இதுவா தண்டனை?

அகிலாவின் கைவிரல்கள் இனி உபயோகமில்லை என்று டாக்டர் சொன்னது கூரிய ஈட்டியைப் போல் பாய்ந்து என் இதயத்தைக் குத்தி அளிந்த புண்ணுக்கிவிட்டதே! ஐயோ! அந்த கொடிய நஷ்டத்திற்கு நான்தானே காரணம். அகிலாவின் இதயம் என்னை சாபமிட்டு நொறுக்காதா! அவள் மகா பரிசுத்தாத்மா; பொறுமைசாலி என்றாலும் அங்க ஊனத்தைக் காணும்போது வயிறு பற்றி எரியுமல்லவா? அந்த கொடுமை என்னைச் சும்மா விடுமா! அதே வேதனை என்னை பஸ்மீகரம் செய்து உயிரையே உறிஞ்சிவிடும் போலிருக்கிறதே! என்ன செய்வேன்? ஹாஸ்டல் படிப்புக்கு நான் எதிர்பார்த்து ஆசைப்பட்டதெல்லாம் இப்போது கசப்பாயும் சதாவேதனையாயுமிருப்பதால் படிப்பில் நான் இதுகாறும் எடுத்த பெயரை மறைத்துவிடும்படி பெரிய ஸைபர்தான் வாங்கப்போகிறேன். இப்படி அவமானப்படுவதைவிட தகப்பனரிடமே ஏன் போய்விடக்கூடாது?

''உனக்கென்ன உடம்பு! ஏன் இப்படி சதா கவலைப்பட்டு உருமாறுகிறாய்! கல்யாணமாகவில்லை என்கிற குறையா! அல்லது யாரையாவது காதலிக்கிறாயா! நாவல்களில் வருவதுபோல லவ் என்கிற பிசாசு உன்னையும் பிடித்துவிட்டதா! அப்பா அம்மாவைப் பிரிந்த வேதனையா?'' என்றெல்லாம் ஆளுக்கொரு கேள்வி கேட்டு பின்னும் வருத்தும் உபத்திரவத்தைத் தான் சகிக்க முடியவில்லை. மாணவிகளைவிட உபாத்தியாயினிகள் தொணப்புதான் பொறுக்க முடியவில்லை. என்ன செய்வது?''

என்று அமராபாய் சதாகாலமும் வருந்திக்கொண்டே இருந்ததால் உடல்நலம் குன்றி, ஜுரம் கண்டுவிட்டது. தகப்பனர் வந்து அழைத்துக்கொண்டு போனர். பலமான வைத்திய சிகிச்சை ஆரம்பமாயது.

இவள் மனத்திற்குள் துளைக்கும் வேதனையின் பயங்கரமே வியாதியாகியதென்கிற ரகஸியத்தை யாரால் அறியக்கூடும்? மாதக் கணக்குக

ளாகியும் அகிலாவைப்பற்றியோ, ஸரஸாவைப்பற்றியோ தகவல் தெரியாததால் அவளுக்கு வேதனை தாங்கமுடியாதுபோய் தாயாரிடம் கண்ணீர் விட்டுக் கதறினள்.

மனோ வ்யாதியின் வேகம் உடல் வ்யாதி முற்றுவதாகத் தெரிந்தது. ஸரஸாவைத் தான் அழைத்துவந்து விடலாமா என்றும் தோன்றியது. முன்பின்னறியாத சினேகிதை வீட்டில் ஒருவயதுப்பெண், குழந்தையுடன் இருப்பதென்ருல் கட்டுக் காயதாவுடன் மனிதர்கள் இருக்கையில் விடுவதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். அவ்வாறு அழைப்பதும் தவறு. வேண்டுமானுல் ஒரு முறை போய் பார்த்துவிட்டு வரலாம். குழந்தைக்குப் பரிசுகொடுக்கும் முறையில் பணஉதவி செய்யலாம். எதற்கும் உன் உடம்பு சற்று தேறட்டும் அழைத்துப்போகிறேன்'' என்று அமராவின் தாயார் சமாதானம் செய்தாள். அந்த ஆறுதலில் சற்று மனச்சாந்தி உண்டாகியது.

டாக்டர்கள்மேல் டாக்டராகப் பலபேர்களை மாற்றி வைத்யம் செய்தும் குணப்படாததால் இருமல் ஆஸ்பத்திரிக்குப் போனுல்தான் சீக்கிரம் குணமாகும் என்று தீர்மானித்து அங்குக் கொண்டுவிட்டார்கள். ஆஸ்பத்திரியின் அலங்கோலந்தான் கேட்கவே வேண்டாம் இருமல் நோய்களில் எத்தனை விதம் உண்டோ, அத்தனை விதமும் நிரம்பிக் கிடக்கிறது. ஆண்களைவிடப் பெண்களே அதிகமாகக் காணப்பட்டது வியப்பிலும் வியப்பாக விருந்தது.

அமராபாயின் தகப்பனுர் பெரிய உத்யோகஸ்தராகையால் அவர் ஸ்பெஷல் ரூம் எடுத்துக்கொண்டு வெகு சவுகரியமான முறையில் அவளைக்கவனிக்க ஏற்பாடுசெய்தார்.

நாம் முன்பு தெரிவித்த அந்தகப் பாடகன் உண்மையில் அமராபாயின் அண்ணனல்ல. அவனுடைய வரலாற்றையாருமறியமாட்டார்கள். பிறவிக்குருடன், பிறவிப்பாடகன், என்பதுதான் பிறர் அறிந்த உலக ரகஸியம். அவனுடைய அத்புத கானத்தின் திறமையை அமராபாயின் பெற்றோர்கள் மெச்சி அவனைத் தமது சொந்தக்காரன் என்று எல்லோரும் நம்பும்படியாகச் செய்து தமது ஆதரவிலேயே அவனைப் பாதுகாத்துவருகிருர்கள்.

அந்தகன் வயிறு பிழைக்கவும் அவனுல் பிறருக்கும், நன்மையும் உபகாரமும் உண்டாகும்பொருட்டும் மகா ரஸிகரான அமராபாயின் தகப்பனுர் ஒரு தனி விடுதியில் அவனுக்கான சகலசௌகரியங்களையும் செய்துகொடுத்து அக்கரையுடன் பாடுபடுவதற்கான மனிதர்களையும் நியமித்து அவன் மனம் களிவெறி கொள்ளும் வண்ணம் செய்தார். அம்மட்டுடன் நிற்காமல் அவன் சங்கீதத்தை வ்ருத்திசெய்து கச்சேரிகள் பாடவும் தயாராக்கியதோடு அவனிடமே அனேகர் கற்றுக்கொள்ளும்படி ஒரு பள்ளிக்கூடமும் வைத்தார்.

அந்தகனுக்கு கச்சேரியிலும் பள்ளிக்கூடத்திலும் வரும் பொருளை அவன் ஆத்மா த்ருப்தியடையும்படி ஊமை, குருடு, செவிடு முதலியவர்களுக்காக ஏற்படுத்தியுள்ள பள்ளிக்கூடத்திற்கு வருஷா வருஷம் அந்தகன் பெயரால் நன்கொடை அளிக்கப்பட்டு வருகிறது. அதுவே அவன்உள்ளத்தில்கடலெனப்பொங்கும் ஆனந்தமாகத் தேங்கியது.

எத்தகைய வ்யாதிக்கும் பலவித மான அவுடதங்களைக் கொடுத்துக் குணப்படுத்துவதோடு சங்கீதமும் சமய சஞ்சீவியாய் உபயோகித்து

நற்பயனையும் ப்ரமாதமான வெற்றியையும் பெற்றுள்ள நமது ஆத்மநாதன் இருமல் வ்யாதிக்கென்று ப்ரத்யேகமாய் நிறுவப்பட்டுள்ள ஆஸ்பத்திரிக்கு நிரந்தரமான மாதச் சம்பளத்திற்கு அனேக சங்கீத வித்வான்களை நியமித்திருந்தார்.

அதே ஆஸ்பத்திரியில்தான் நமது அமராபாயும் கொண்டுவிடப்பட்டதால் அவளுக்கு முதலில் ஆஸ்பத்திரியின் வாழ்க்கை எப்படி இருக்குமோ என்று பயந்ததற்கு நேர்மாறாக அங்கு நடக்கும் நூதன முறையின் அபூர்வ சக்தியைக் கண்டு வியப்புக் கடலில் திளைந்தாள். சங்கீதத்தின் நிகரற்ற சக்தியைப் பலவித ஆதாரங்களுடன் விளக்குவதைப் புத்தகங்களில் படித்து இன்புற்றிருந்தாளேயன்றி சங்கீதம் பரம அவுடதமாகக் கையாளப்படும் முறையை அவள் கண்டதே இல்லை. அதிகாலையில் வெகு ஆனந்தமாக உதயராகம்பாடுவதும், பஜனை செய்வதுபோல் சிலர் இனிய குரலில் நாமாவளியை இசைப்பதும் கேட்கக் கேட்க அவள் மனதே ஆனந்தத்தில் மிதக்கவாரம்பித்தது. எல்லாவற்றையும்விட இரவுகாலத்தில் அந்த சமயத்திற்குப் பொருத்தமான ராகங்களை வீணை, பிடில் முதலிய இசைக்கருவிகளுடன் 'தேவகானமோ! கந்தர்வகானமோ!' என்று ப்ரமிக்கத்தக்கவிதமாகப் பாடச்செய்வதையும் அந்த இன்னிசை மதுவை அருந்தியவாறு நோயாளிகள் ஆனந்த நித்திரை செய்வதையும் கண்டு அவளுக்கு சொல்லத்திறமற்ற வியப்பு உண்டாகியது.

இந்த ஆஸ்பத்திரியில் நிரந்தர காயகனுய் அந்த தேவகானம் செய்யும் அந்தகனும் வந்தால் தேவலையே என்று எண்ணி அதைத் தன் தகப்பனரிடம் சொன்னாள். இந்த புதிய முறையைக் கண்டு அவரும் ஆச்சரியத்துடன் அந்தகனை வரவழைக்கவே எண்ணினர். ஆனல் "அவன் மூலம் பலபேர்கள் சங்கீதம் கற்றுக் கொள்ளும் பள்ளிக்கூடம் நின்றுவிடுமாகையால் உனக்காக வாரத்திற்கொருதரம் வரவழைக்கிறேன்" என்றார்.

வீட்டிலிருந்ததைவிட ஆஸ்பத்திரிக்கு வந்தபிறகு அமராபாயின் முகம் சற்று தெளிவுற்று விளங்குவதைக் கண்டு சந்தோஷப்பட்ட அவளுடைய பெற்றோர்கள் ஆத்மநாதன், சுமதி ஆகியவர்களிடம் இவளை ப்ரத்யேகமாகக் கவனிக்கும்படிக்குக் கூறினர்கள். (ஆத்மநாதன் யார்! சுமதிபாய் யார் என்கிற தகவல் தெரியவேண்டுமாயின் கஸ்தூரி திலகம் என்கிற நாவலை வாங்கிப் படித்து மகிழுங்கள்)

எத்தனைதான் அமராபாய் ஆனந்தமாகப் பொழுதுபோக்கினும் இடையிடையே அகிலாவின் குடும்பத்தின் நினைவு பாதிக்காமலில்லை. அகிலாவின் விலாஸந்தான் தெரியவில்லை. ஸரஸாவுக்குக் கடிதம் போட்டும் வெகுநாட்களாகிவிட்டது. அவளுக்குப் போட்டுப் பார்க்கலாமா! என்று தோன்றியதால் சுருக்கமாக ஒரு கடிதமெழுதிப்போட்டபின் பதிலுக்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். என்ன காரணத்தினலோ தெரியாது! பதில் வருமா! வராதா! என்கிற சந்தேகம் அமராபாயின் மனத்தில் பலமாக பாதிக்கவாரம்பித்தது. அதற்குத் தகுந்தாற்போல் நாட்கள் கடந்துபோயிற்றேயன்றி பதில் கிடைக்காததால் அவளது கலவரம் அதிகரித்தது.

## 22

எத்தகையோருக்கும் எந்த விஷயத்திலும் சந்தேகமோ, வேற்று

மையோ உண்டாகாதிருக்கும் வரையிலும் எவ்விதமான பயமும் விபத்தும் நேரிடுவதில்லை. எல்லாம் நன்மையாயும் நேர்மையாயுங்கூடத் தோன்றி வெள்ளை மனத்துடனேயே பழகச்செய்கின்றன. ஒரு கடுகளவு வேற்றுமை உண்டாகிவிட்டதென்றாலும் அதோடு வாழ்க்கையின் பாதையே மாறி எங்கிருந்தோ சந்தேகமென்கிற முள்ளும் கல்லும் நிரம்பித் தத்தளிக்கச் செய்கிறது.

தன் மாட்டுப்பெண் குழந்தையுடன் வந்திருக்கும் பெருமையும் சம்மந்திகள் வந்திருக்கும் சந்தோஷமும் ஒன்று கூடித்தான் அம்மாவுக்குத் தன்மீது வெறுப்பும் அசூயையும் உண்டாகி தன்னை அலக்ஷியப் படுத்திவிட்டதாக ஒரு எண்ணம் உண்டாகியதால் அவளுக்கு எங்குமில்லாத துக்கப் பீறிக்கொண்டுவந்து தன்னையறியாதுக் கதறினாள்.

ஒவ்வொரு விநாடியும் ஸரஸாவுக்கு தனது நிலைமையை நினைத்து நினைத்து அகிலாவின் மீது அபாரமான பரிதாபமும் "ஐயோ பாவம்! அவள் எப்படி சகிக்கின்றாளோ!' என்கிற பச்சாத்தாபமும் உண்டாகியது. தலைவிதியும் சங்கடமும் தான் பட்டால்தானே தெரியும் என்கிற பழமொழி பொய்யாகிவிடுமா! எனக்கிந்த அனுபவம் உண்டாகியதால் அல்லவா என் மனத்தில் அகிலாவின் பரிதாபம் நன்றாய்த்தெரிகிறது.'' என்று அவள் மனதே எண்ணி வருந்தியது.

இதுகாறும் விகல்பமாக நினைக்காதிருந்த ஸரஸாவின் மனத்தில் வித்யாஸமென்கிற விஷத்துளி ஒரு அணுவளவு விழுந்த வேகத்தில் அவளுக்கு யாரைப் பார்த்தாலும் வித்யாஸம், எதைப் பார்த்தாலும் சந்தேகம், யார் எதைப்பற்றிப் பேசினாலும் தன்னையும் தன் குழந்தையையுந்தான் சுட்டிக்காட்டிப் பேசுகிறார்கள் என்கிற விநோதமான எண்ணம் ஆகியவைகள் எப்படியோ சடக்கென்று உதயமாயின.

உண்மையில் ஸரஸாவின் அண்ணன் மனைவி எவ்வித வித்யாஸ வார்த்தையும் சொல்லாதிருக்கும் போதுகூட அவள் பேசுவது முற்றும் இவளுக்கு வித்யாஸமாகவே தோன்றி ஏற்கெனவே மனத்தில் தொந்தளிக்கும் விசனத்தைத் தூண்டிவிட்டது.

பெற்ற தாயாருடன்கூட அதிகம் பேசுவதில்லை. குழந்தையையும் சரியாகக் கவனிப்பதில்லை. ஏதோபேய் பிடித்தவள்போல் இருக்கும் சமயம் அமராபாயின் கடிதம் வந்தது. முதலில் தன் கணவன் எழுதியிருக்கிறாரோ! என்று ஒரு விநாடி மகிழ்ந்தாள். அடுத்த விநாடியே ஸரஸாவின் தமயன் கடிதத்தை முன்னும் பின்னும் உற்றுப் பார்த்துவிட்டு "பெண்பிள்ளையின் எழுத்துபோலிருக்கிறது சஞ்ஜீவிபுரம் என்று முத்திரை இருக்கிறது'' என்று சொல்லியவாறு கடிதத்தைத் தானே உடைத்துத் தன் தாயாருக்குப் படித்துக்காட்டினான்.

'அன்பு மிக்க ஸரஸாவுக்கு, உபய குசலம். உன் குழந்தையும் நீயும் சவுக்யமென்று நம்புகிறேன். உங்களைப் பார்க்க வேண்டுமென்று வெகு ஆவலாயிருக்கிறது. அகிலாவைப்பற்றியோ உன் கணவனைப் பற்றியோ எவ்விதமான தகவலும் தெரியாததால் உனக்கு ஏதாவது தெரிந்திருக்குமோ என்று இதை எழுதுகிறேன். எனக்கு உடம்பு மிகவும் படுத்துவதால் நான் சஞ்ஜீவி புரத்தில் ஸ்ரீமான். திவான் பகதூர் ஆத்மநாதன் அவர்களுடைய ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறேன். நீ எப்படியாவது ஒரு முறை உன்

குழந்தையுடன் இங்குவந்து போகும் படி மிகவும் கேட்டுக்கொள்கிறேன். உங்களைப் பார்க்க ஆவல் அதிகமாயிருக்கிறது. கட்டாயம் வரவும்.

இங்ஙனம் உன் ப்ரிய தோழி
அமராபாய்'

இதை அவள் அண்ணன் படிக்கக் கேட்கும்போதே ஸரஸாவின் வரண்ட இதயத்தில் இன்பத்தேன் சுரப்பதுபோல் ஒரு ஆனந்த உணர்ச்சி உண்டாகியது. அதே கடிதத்தைப் படிக்கக்கேட்ட அவளது தாயாரின் முகத்தில் கூறத்திறமற்ற கடுங்கோபமும் ஆத்திரமும் கூடி எள்ளும் கொள்ளும் வெடிப்பது போன்ற உணர்ச்சி உண்டாகியதைக் கண்டதும் ஸரஸா திடுக்கிட்டு 'தாயாரின் முகத்தில் ஏன் இத்தனை மாறுதல்?...என்ன வார்த்தை அவள் வாயினின்று வருமோ?'' என்று எண்ணும்போது அவளது உடலே நடுங்கும் அதிர்ச்சி உண்டாகியது. அதையே அதிகப்படுத்துவது போல் அவளது தாயார் பல்லைக் கடித்தவாறு, "தோழியாம் தோழி... தோழியைப்பாரு. நெருப்புக்கோழி தான்... நெருப்பைக்கக்கி அவர்கள் குடும்பத்தையே சின்னபின்னம் செய்து சிதறவடித்து எரித்துச் சாம்பராக்கி வேடிக்கை பார்க்கும் மகா பாவிக்கு ஆசை ஊற்றுபோல் சுறக்கிறதோ பாவம்! இந்த சண்டாளியின் சினேகம் செய்யாதிருந்தால் இவர்கள் கதி இப்படியாகியிருக்குமா! தான் பணக்காரி என்றும் விவாகம் வேண்டாத கன்னிகை என்றும் அப்பழுக்கற்ற நாரீமணி என்றும் தன்னை நினைத்து உங்களிடம் நேசம்காட்டிக் குட்டிச்சுவரடித்து ஒருத்திக்குத் துணையாக உன்னையும் வாழாவெட்டியாக்கி விட்ட பாவி உன்னை அழைப்பதாம்; நீ போவதாம். கனவுகூடக் காண முடியாது ஜாக்ரதை. அவள்தான் சந்தி சிரிப்பதுபோல் திண்டாடுகிருள். உங்கள் பெயர்களையும் ஏன் இழுக்கவேண்டும்? அந்த ஒரு செய்கையிலேதானே இத்தகைய விபரீதம் விளைந்துவிட்டது. உங்கள் வாழ்வைச் சிதைத்த அந்த மகாபாவி ஆஸ்பத்திரியில் அவதிப்பட்டுச் சாக வேண்டும். திரும்பி வரவேகூடாது. என் வயிறு எரிகிற மாதிரி அவள் எரிந்துபோகணும்.''

என்று கைகளைச் சுடுக்கிச், சாபமிட்டுக் குதிப்பதைக்கண்ட ஸரஸாவின் இதயம் நெருப்பிடை புழுகென உருகியது. கண்ணீரை அடக்கமுடியாது பொங்கிப் பொங்கி வருகிறது. அமராபாயைத் திட்டுவதைச் சகிக்காமல் "அம்மா! நீ என்னை எத்தனை வேண்டுமாயின் திட்டு. அடிக்கவும் அடி. நான் பட்டுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். மகா பரிசுத்தவதியாகிய அமராபாயின்மீது வீண் பழியோ இழிவோ கூறி வசைபாணத்தைத் தொடுக்காதே. அவள் காலில் ஒட்டிய தூசிகூட பிறருக்குத் தீங்குசெய்ய நினைக்காது என்பதை என் அந்தராத்மா அறியும்.''

என்று அவள் தன்னை மீறிய ஆவேசத்துடன் கூறி முடிக்குமுன் அவள் தாயார் கட்டுக்கடங்காத ஆத்திரத்துடன் ''ஆகா! அப்படியா செய்தி! அந்தராத்மா அறியுமா! அந்தராத்மா அறிந்ததால்தான் இந்த ராத்மா ஒரு கொஸு-ர் குட்டியுடன் வாழாவெட்டிக்குச் சமானமாய் உலாவவைத்து வேடிக்கை பார்க்கிறது...சீச்சீ! போ! எதிர்த்துப் பேசி மனத்தை இன்னும் புண்ணாக்காதே'' என்று கூறிக்கொண்டே உள்ளே போய்விட்டாள்.

மறுபடியும் வெளியே வந்து தன் மகனைக் கூப்பிட்டு ஏதோ ரக

ஸியமாகச் சில விஷயங்களைக் கூறி 'அவ்வாறு கடிதம் எழுதிவிடு' என்று சட்டத்தையும் விதித்துவிட்டுப் போனுள். பாவம்! இந்தப் பேதையின் மனம் முறிந்தது. அவளுடைய நிலைமையில் பதில் பேசுவதற்குத் தைரியமோ உரிமையோ ஏது பாவம்! தன் தாயார் என்ன ரகஸியம் பேசினுள் என்பதும் தெரியாது விழித்தாள்.

தன் நாத்தனருக்கு நன்மை செய்யும்பொருட்டு மகத்தான உதவியைச் செய்த அமராபாயிக்கு இதுவா தக்க பரிசு? இதுவா தக்க மரியாதை? என்று எண்ணி மனது துடிக்கிறது. தான் ஓடிப்போய் பார்க்கலாமா! என்று ஆவல் அடித்துக்கொண்டும் அவள் அடிமை அடிமைதானே! "கூழு குடித்துக் குடிசையில் வாழ்ந்தாலும் கந்தலைக் கட்டிக் கணவனுடன் இருப்பதற்குச் சமானம் வேறு எது வரும்? நான் அனுபவித்த பிறகுதான் அகிலாபாயின் பொறுமையும் அவளது நிலைமையும் எனக்கு நன்ருக விளங்குகிறது. ஐயோ, பாவம்! முன்பு அமராபாய் எழுதிய கடிதத்திற்குப் பிறகு இன்னும் அவர்களுடைய விஷயம் தெரியவில்லை. என்ருல் அவள் கதி என்னவாகிஙதோ! எப்படியானுளோ?... என்று தனக்குள் வெதும்பித் துடிக்கிருள். கூண்டிலடைபட்டுள்ள பறவையின் கதிபோல் இவளுடைய கதியும் ஆகியது.

## 23

அமராபாய் ஒருவாரகாலம் கடிதத்திற்குப் பதிலை எதிர்பார்த்தும் ஒருவித தகவலும் இல்லாததால் 'சரி, இனி பதிலும் இல்லை. ஒன்றுமில்லை' என்று சலிப்புற்ருள். ஆத்மநாதன் நோயாளிகளுக்காகவே ஒரு இடத்தில் பாடுகிற இசை ஆஸ்பத்திரியின் பல பாகங்களிலும் கேட்கும்படி ஒலிப்பெருக்கிகள் வைத்து அபூர்வமாய் ஏற்பாடுகள் செய்திருந்தான்.

சிற்சில நோயாளிகள் தாம் விரும்பும் சங்கீதமே வேண்டும் என்றதால் அவர்களுக்குமட்டும் மின்ஸார விசையை நிறுத்திவிட்டு நேருக்கு நேராகவே பாடச்செய்து அவர்களை மகிழ்விப்பான். அன்று அமராபாய் நித்திரை வராது படுத்திருக்கையில் இரவு கானம் ஆரம்பமாகியது. 'என்ன ஆனந்தம்! என்ன அத்புதம்! ஸஹானுராகம் உள்ளத்தை உருக்கும் வகையில் மெல்ல காற்றில் மிதந்துவந்து அவளைப் பரவசமுறச் செய்தது. கண்களை கெட்டியாக மூடியபடியே தன்னைமறந்த உணர்ச்சியுடன் தானும் அதே சஹானுராகத்தை இழுத்துக்கொண்டிருந்தாள். அச்சமயம், இரவுகாலத்தில் பேஷண்டுகள் எப்படி இருக்கிருர்களென்று பார்வையிடும் வழக்கம் போல் ஆத்மநாதனும் அவனுடன் வேலைசெய்யும் மற்ருெரு டாக்டர் கோகுல்நாத்தும் அங்கு வரும்போதே உள்ளிருந்து அமராபாயின் கானம் இனிமையாக வருவதைக்கண்டு ஒரு க்ஷணம் அப்படியே நின்ருர்கள்.

" சங்கீதத்தில் ருசிமட்டுமின்றி செவ்வனே பாடும் திறமும் இருப்பதால்தான் இந்தம்மாளுக்குச் சங்கீத சஞ்சீவி மிகவும் பயன் படுகிறது. தினம் நூறுக்குமேல் ஓடிக்கொண்டிருந்த ஜுரம் இப்போது இரண்டு நாட்களாய் நூறுக்குமேல் போகாது இருக்கிறது. மிஸ்டர் கோகுல்! நீங்களதை எல்லா பேஷண்டிடமும் கவனிக்கின்றீர்களா!" என்று மெல்லிய குரலில் கேட்டான்.

கோகுல்:—ஓ! தங்களிடம் ப்ரத்யேகமாகப் பழகும்பொருட்டு வந்துள்ள நான் இதைக்கூடக் கற்றுக்

கொள்ளவேண்டாமா! ஒன்பதாம் நம்பர் வார்டிலுள்ள சிலர் உயர்ந்த சங்கீதத்தைவிட சினிமா டாக்கி கீதங்களை - தற்காலம் வெகு அத்புத மான பின்னணி கீதத்துடன் - அமைந்திருக்கும் இசைத்தட்டுகளை - விரும்புவதை அறிந்து க்ராமபோன் கம்பெனிக்கு போன் செய்து டாக்கி இசைத்தட்டுகளை ஏராளமாக வர வழைத்து மிகவும் இனிமையாய் பாடுகிற நக்ஷத்திரங்களின் கவர்ச்சி யுள்ள மெட்டுக்களாலமைந்த ரிகார்டுகளை நமது சுமதிதேவியாரும் வஸந்தராதேவியாரும் சேர்ந்து பொருக்கி எடுக்கும்படிச் செய் தேன். அந்த இசைத் தட்டுகளை வைத்துக் கேட்கும் குஷியில் படுக்கையோடு படுக்கையாயிருந்த வாலிபன் ஒருவன் மெல்ல எழுந்து உட்காரவாரம்பித்தான். அந்தஅதிர்ச் சியால் உடம்பு அதிகமாகிவிடப்போ கிறதே என்று மெல்ல படுக்கச் செய்தேன்.

மற்றொரு பேஷண்டு ரிகார்டுக ளைத் தானே பார்வையிட இறங்கி யும் வந்துவிட்டார். டாக்கி இசை என்றால் சிலருக்கு அவ்வளவு மோகமாயிருக்கிறது. அடாடா! டாக்கி இசையானால் என்ன? உயர்ந்த வித்வத் நிறைந்த சங்கீத மானால்தான் என்ன: நம்முடைய லக்ஷ்யம் ஈடேறி வெற்றிகொடுத் தால்போதும் - என்றான்.

இதைக்கேட்ட ஆத்மநாதனின் இத யம் ஆனந்தமயமாய் நிறைந்து பொங்கியது. அவன் அடுத்த வார்டை நோக்கிச் சென்றான். கோகுல்நாத் மட்டும் அமராபாயின் அபூர்வ கானத்தைக் கேட்டு ப்ரமித் தவாறு சில நிமிஷம் நின்று பின் வெளியே சென்றான். "இந்த நோயாளி நன்றாகக் குணமடைந்த பிறகு இங்கேயே பாடகியாய் சேவை செய்யும் தொழிலில் கட்டா யம் நம் தலைவர் அமர்த்தி விடுவார்." என்று எண்ணினான்.

மறுதினம் அதிகாலையில் "மேலு கோ வய்யா! மேலுகோ ராமா!" என்கிற உதயராகப் பாடலை ஆஸ் பத்திரி காயகி பாடும்போது மெய் மறந்து தூங்கும்அமரா மெல்ல கண் விழித்து அந்த அபூர்வ கானத்துடன் தானும் கலந்து "மேலைன ஸீதா ஸமேத நா பாக்யமா" என்ற அடி களை அங்குள்ள கடவுளின் படத் திற்கு நமஸ்காரம் செய்தபடியே பாடினாள்.

அதே சமயம் கோகுல்நாத் அங்கு வந்து "பேஷ்! சபாஷ்!" என்று கூறியவாறு நிற்காமல் சென்றுவிட் டான். அமராபாய் சடக்கென்று எழுந்துவந்து பார்த்தாள். டாக்டர் கோகுல்நாதனை இருப்பதைக் கண் டதும் ஒருவாறு வெட்கமடைந்து மீண்டும் தன்னறைக்கு வந்து உட் கார்ந்தாள்.

"நான் பாடியதைக் கேட்டுப் பரி காஸம் செய்து அப்படிச் சொன் னாரா! அல்லது உண்மையிலேயே நான் நன்றாகப் பாடுவதாக ரஸித்து அப்படிச் சொன்னாரா!... சே! இரண்டாவது வகையில் சேர்ந்த தாயின் நேராக நின்று என்னிடமே அவ்வாறு சொல்லியிருக்கமாட் டாரா! இது கட்டாயம் பரிகாஸம் தான் செய்திருக்கிறார்... நான் அத் தனை மோசமாகவா பாடினேன்!" என்ற பலவிதமான குழப்பத்துடன் உட்கார்ந்திருக்கையில், கோகுல் கையில் இஞ்செக்ஷன் ஊசி சகிதம் அங்கு வந்து "அடாடா! பாட்டு நின்றுவிட்டதா! நான் வந்துவிட் டேன் என்று நிறுத்திவிட்டீர்கள்?" என்றான்.

அமரா:—(ஒருமாதிரி முகத்தை வைத்துக்கொண்டு) ஆமாம்! சங்கீ

த்தின் அபூர்வ சக்தியை அவுஷத மாக உங்கள் எஜமானர் கண்டு பிடித்து உதவுவதுபோல் நீங்கள் நோயாளியைப் பரிகஸிப்பதும் கேலி செய்வதும் ஒரு பரம அவுடத மாகக் கண்டுபிடிக்க உத்தேசமோ? அதைமுதல்முதல் இவ்விடத்திலேயே கையாண்டு பார்க்கத் தீர்மானம் போலும். எனக்குப் பாட்டும் தெரி யாது ஒன்றும் தெரியாது'' என்று சற்று முகச் சுளிப்புடன் கூறினாள்.

கோகுல்நாத் "ஆம். வாஸ்தவந் தான். சில நோயாளிகளுக்கு சில சமயம் பரிகாஸம், கேலி, முதலிய வைகள் கூடப் பரம அவுஷதமாக முடியலாம். அதாவது அவர்கள் சள சளவென்று பேசுகிற ப்ரக்ருதிகளா யிருந்தால் அதனால் அவர்களுக்கும் கஷ்டம்; பிறருக்கும் தொந்தரவு. அத்தகையவர்களை சாதாரணமாக மவுனம் சாதிக்கச்சொன்னால் நடக் காது. கேலியும் பரிகாஸமும் செய் தால் உடனே ரோஷம் பொத்துக் கொண்டு வரும் வேகத்தில் தான கவே மவுனம் சிறிது நேரமாவது நிலைத்து நிற்குமல்லவா! ஆகையால் உங்கள் யோசனையும் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான்'' என்று சிரித்துக்கொண்டே கூறியவாறு ஊசியும் குத்தி, வேலையை முடித்து விட்டு "குட்மார்னிங்கு" என்று சொல்லிப் போய்விட்டான்.

அமராபாயிக்கு எவ்வித காரண மும் இல்லாமலேயே ஏதோ ஒருவித மான மன அதிர்ச்சியும் திக்கு திக் கென்று அடித்துக்கொள்ளும் ஒரு படபடப்பும் உண்டாயின. அன்று முதல் ஒரு விசித்திரமான புத் துணர்ச்சி அவளது இதயக்கோட் டையில் முற்றுகையிட்டதைக்கண்டு அவளே வியந்தாள்.

கோகுல்நாதினிடம் பேசுவதும், அவரது அத்புதமான முக தரிசனத் தைக் காண்பதும் அமராபாயிக்கு அளவிடமுடியாத ஆனந்தமும் த்ருப் தியும் உண்டாக்கியது. அவர் யாரு, என்ன ஜாதி. முதலிய விவரங்களைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவல் கொண்டவளாய்த் துடித்தாள். எனி னும் அவரது தோற்றத்திலிருந்து அவர் விவாகம் ஆனவரா! இல்லை யா! என்று அறிந்துகொள்ள முடியவே இல்லையாதலால் சகல மான உணர்ச்சிகளையும் தன்னிதய பாதாளத்திலேயே அழுத்திப் பூட்டி யிருந்தாள்.

அந்த புதிய உணர்ச்சியின் விசித் திரம் அவளையே ப்ரமிக்கச்செய் தது. அவள் பி. ஏ. படித்த பெண் ணயினும் அடக்க ஒடுக்கமாயும் அதிகப்ரஸிங்கித்தனமான ப்ரவர்த் தகம் ஒன்றுமில்லாமலும் இருந்தவ ளாதலால் அவள் இதர விஷயங் களில் அனாவச்யமாக மனத்தைத் தளரவிடவோ, ப்ரவேசிக்க விடவோ செய்தது கிடையாது. ஆகையால் இப்புதிய நூதன உணர்ச்சி உண்டாகியது அவளுக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருந்தது.

முன்பொரு நாள் ஸரஸாவுக்கு ஆண்குழந்தை பிறந்தது என்கிற சந்தோஷ சமாசாரத்தைக் கேட்ட உடனே ஒரு க்ஷணநேரம் தன் மனது ஏதோ புதிய ஆசை அலையால் மோதுண்டு நூதன எண்ணங்களைக் கொடுத்து உலுக்கிய உணர்ச்சி இப் போது அவளுடைய உள்மனத்தில் தோன்றி நிலைப்பூட்டியதும் தனக் குத்தானே இன்பமுற்றுக் கண்களை இறுக மூடிக்கொண்டு மவுனத்தில் ஐக்யமானாள். அவளது உள்ளத்தில் தேங்கிக்கிடக்கும் ஆனந்தத்தின் சாயல் முகத்தில் அபாரமான தேஜஸுடன் ப்ரகாசித்தது.

## 24

"பொம்மைக் கல்யாணத்திற்குச் சமமாக அகிலாவுக்கு விவாகமாகிய பிறகு இது வரையில் கணவனைக் கண்ணால் பார்க்காதிருந்ததே ஒரு விதத்தில் அனுகூலமாக இருந்திருக்கும். நம்மைப்போல் கணவனிடம் ஸம்ஸாரம் செய்து நல்ல புகழையும் பெயரையும் அடைந்து அருமையான குழந்தைக்கும் தாயான பிறகு இம்மாதிரி சிரிப்பாணி படுவதுதான் கஷ்டத்திலும் கஷ்டம். எத்தனைவித ப்ரயாஸைகள் பட்டும் அவர்களிருப்பிடத்தைக் கண்டறியவே முடியவில்லை.

நமக்கிருக்கும் ஒரு சினேகிதையும் நோயாளியாகி ஆஸ்பத்திரியில் கிடக்கையில் இனி நமக்கு யார் உதவி செய்யப் போகிறார்கள்? என் விதி இப்படியே அலைந்து அகால துர் மரணத்தில் தான் முடியும் என்று என் மனத்தில் இரவு பகல் ஏதோ ஒன்று சொல்கிறது. இது தான் வெற்றியடையப் போகிறதோ என்னவோ! யார்கண்டது?" என்று ஸரஸா தடமாடிக் கலங்கிக் கொண்டிருக்கையில் வீதியில் ப்ரமாண்டமான பாண்டு மேளத்துடன் ஊர்வலம் வருவதையறிந்தாள்.

மேள சப்தத்தைக் கேட்டதுமே ஸரஸாவின் குழந்தை பெரியதாக எக்காளமிட்டுக் குதித்து வீதிப்பக்கமே பார்த்து அங்குப்போகவேண்டுமென்கிற தனது ஆவலை தனது தேவ பாஷையில் வெளியிட்டது.

ஸரஸா தன்னைத் தானே மிகவும் கேவலப்படுத்திக்கொண்டு வீதிக்குச் சென்று நிற்பதைக்கூட நிறுத்திக்கொண்டு அடுக்குள்ளே கதியாகவிருக்கத் தொடங்கினாள். குழந்தையின் கும்மாளத்தை யறிந்த ஸரஸாவின் மன்னி அதைத் தான் தூக்கிக் கொண்டு வீதிக்குச் சென்றாள்.

அன்று அவ்வூரில் நடக்கவிருக்கும் ஸம்ஸ்க்ருத மகாநாட்டிற்கு வந்துள்ள ஸம்ஸ்கிருத பண்டிதர்கள் பண்டிதைகள் உள்பட பெரிய ஊர்வலம் சம்பிரதாயமாக நடப்பதால் அதில் பல ஊர்களிலிருந்தும் பல வித்வான்களும், நாரீமணிகளும் வந்திருந்தார்கள்.

ஸரஸாவின் தகப்பனார்மட்டும் "இந்த மகாநாட்டிற்காவது அந்த மனிதன் வருவானா!" என்று ஏங்கினார்; ஆனால் ஸரஸாவுக்கு அது கூடத் தெரியாது பாவம்...

அவளது மன்னி ஓடிச்சென்று "அக்கா! அக்கா! வீதியில் வந்து தான் பாருங்களேன்! நாமும் பெண்களாகத்தான் பிறந்திருக்கிறோம். என்ன ப்ரயோஜனம்? அந்த ஊர் வலத்தில் பெண்கள் சிலர் எத்தனை ஜோராகப்போகிறார்கள் வந்துதான் பாருங்களேன்" என்று வற்புறுத்தி இழுத்துக்கொண்டு வந்தாள்.

அப்பெண்களை உற்று நோக்கியதில் அதில் ஒருத்தியைமட்டும் அமராபாயுடன் அவள் வீட்டில்எப்போதோ பார்த்ததுபோன்று ஒரு சிறிய நினைவு உண்டாகியது. ஆனால் நேரில் பேசியதும் கிடையாது, அமராபாய் அவளை அறிமுகங்கூடப் படுத்தியது கிடையாது. எப்போதோ பார்த்த அடையாளத்தை வைத்துக் கொண்டாவது அமராபாயின் க்ஷேமத்தை விசாரித்தறிய அவள் மனது பெரிதும் துடித்தது.

தான் இருக்கும் நிலைமையில் அதற்குக்கூட வசதியும் அனுமதியும் கிடைக்குமா! என்று ஏங்கினாள். ஊர்வலம் மறைந்த பிறகுங்கூட அவள் இதயத்தில் அதே வேட்கை மிகவும் உச்சத்தையடைந்து போராடியது. வேலைமீதுகூட மனம் செல்லவில்லை. எப்படியாவது அந்த பெண் இறங்கியுள்ள இடத்திற்குப் போய்



அவளை, தானே அறிமுகப்படுத்திக் கொண்டு விசாரிக்கவேண்டுமென்று மனது போராடியதால் அதே நினைவாகப் பகவானை வேண்டினாள்.

தினம் காலையிலும் மாலையிலும் கோயிலுக்குப் போவது தவிர, சற்று தூரத்திலுள்ள காவேரிக்குச் சென்று ஸரஸாதான் நல்ல ஜலம் கொண்டுவருவாள். அன்றும் பிற்பகல் நாலு மணிக்கு குடத்துடன் காவேரிக்குச் சென்றாள். அந்த நேரத்தில் யாருமே இருக்கமாட்டார்



களென்பதால் அவள் தினம் இப்படியே வருவது வழக்கம்.

காவேரிக்கரைக்கு சற்று தூரத்தில் வரும்போதே ஏதோ பேச்சுக் குரலும் பாட்டுக் குரலும் கேட்டு வியந்தபடியே அங்கு கவனித்தாள்.

காவேரிக்கரைமீது ப்ரம்மாண்டமாக வளர்ந்துள்ள பெரிய ஆலவ்ருக்ஷத்தினடியில் சில பெண்கள் உட்கார்ந்து தின்பண்டங்களைத் தின்றவாறு பாடியும் பேசியும் மகிழ்ந்து இன்புற்றிருப்பதைச் சற்று தூரத்திலேயே கண்ட ஸரஸாவின் உள்ளத்தில் அவளையறியாது அபாரமான சந்தோஷம்பொங்கியது.

பகவான் தனக்கும் கடாக்ஷிக்கத் தயாராயிருக்கிறான்! அவன் பக்ஷபாதமற்ற வள்ளல் என்கிற நம்பிக்கை அவள் இதயத்தில் பலமாகப் பதிந்தது.

ஸமஸ்கிருதப் பரீக்ஷை தேறிய வனிதைகளாதலால், அவர்கள் அந்த உயர்ந்த பாஷையிலேயே பேசியும் ச்லோகங்கள் பாடியும் கவலையற்றுக் களிப்பதையும் கண்டஸரஸா இடுப்பில் குடத்துடன் இமை இசைக்காமல் பார்த்தாள்.

அதைக்கண்ட அந்த பெண்கள் நிமிர்ந்து உட்கார்ந்து ஸரஸாவை நோக்கி "ஏன்? இப்படி வாருங்களேன்!" என்று அவர்களாக மரியாதையுடன் கூப்பிட்டதும் ஸரஸாவுக்குமயிர்க்கூச்செறிந்தது. தன்னையொருபொருட்டாக எண்ணி அவர்கள் வலிய அழைத்ததற்கு மகிழ்ந்தவாறு அருகில் சென்றாள்.

குடத்தை யொருபுறமாக வைத்து விட்டு மரியாதையாய் உட்கார்ந்து "மகா வித்யாவதிகளாகிய உங்களை எல்லாம் கண்டது எனக்கு அபாரமான சந்தோஷத்தை யளிக்கிறது. இன்றே சுதினம். இந்த சிறிய ஊரில் இத்தகைய அபாரமான கூட்டம் நடத்துவது வியக்கத்தக்கது. உங்களை யெல்லாம் பார்க்கும் போது எனது ஆப்த சினேகிதை அமராபாய் என்பவள் நினைவாகவே இருக்கிறது." என்று தான

கவே ஆரம்பித்தாள்.

ஏற்கெனவே இவளை அமராபா யுடன் பார்த்ததாக நினைவுக்கு வந்த ஒரு மாணவி சற்று வியப்புடன், "யாரு... K. அமராபாயா! உங்கள் சினேகிதையா அவள்! அடாடா! அமராபாய் எனக்கும் ப்ராண சினேகிதமாயிற்றே? உம்... அவள் தான் இப்போது சஞ்சீவிபுரத்து ஆஸ்பத்திரியில் ஆத்மநாதனின் வயித்தியத் திலிருக்கிறாள். அவளை ஒரு முறை போய் பார்க்கவேண்டு மென்று ஆவலாயிருக்கிறது. முடிய வில்லை. நீங்கள் பார்த்தீர்களா?" என்று வியப்பாகக்கேட்டாள்.

ஸரஸா:-உம். ஸ்வதந்திரப்பறவை கள்போன்றுள்ள உங்களாலேயே முடியவில்லைஎன்றால் அடிமையிலும் அடிமை, ஆயுள் தண்டனைக் கைதியைப்போல் உள்ள எனக்கு எப்படியம்மா போகமுடியும்? நீங்கள்சொல்வதுபோல்ஆசை அடித் துக்கொள்கிறது. அடிமைத்தளை பிணைத்து இழுக்கிறது. என்ன செய்வேன்? எப்போதாவது நீங்கள் போய் பார்த்தால் 'உங்கள் சினே கிதை ஸரஸா உங்களை மிகவும் விசாரித்தாள்' என்றுசொல்லுங்கள்' என்று கூறும்போது கண்களில் ஜலம் தாரைகச்சுரந்துவிட்டது.

அவர்களில் ஒருத்தி "ஏனம்மா! அடிமை என்கிறீர்களே! அதன் அர்த்தம் என்ன? வெளி நாட்டமே இல்லை என்பதா! கல்வி வாஸனையே இல்லைஎன்பதா, வேறு ஏது?" என்று வியப்புடன் கேட்டாள். கூட விருந்த மற்றொருத்தி, "ஆமாம் நாட் டுப்புறத்து ஜனங்கள் தாராளமான கல்விபோதித்து வளரவிடுகிறார்களா? தாம் எத்தனை படித்தாலும் சில ஆட வர்கள் பெண்கள் படிப்பதற்கு ஒப் புக்கொள்ளாது ஜடமாக இருக்கி றார்கள். இந்த அம்சத்தில் முதல் தாம்பூலம் பெற்றவர் எனது ப்ரை வேட்டு வாத்தியார்தான்!" என்றாள்.

வேறொருத்தி:—ஓ!அப்படிப்பட்ட ப்ரக்ருதி உனக்குமட்டும் எப்படிப் ப்ரைவேட் சொல்லிக்கொடுக்கிறது?

அவள்:—அதுதான் விசேஷம். "தும்பி காய்ந்தால் குதிரையும் வைக் கோல் தின்னும்" என்கிற பழ மொழி பொய்யாகிவிடுமா! வயிற் றிற்கில்லாதகொடுமைதான். அவர் ஏதோ சமஸ்கிருத பாடசாலையில் வாத்தியாராயிருந்தாராம். என்ன லேயோ வேலை போய்விட்டதாம். குடும்பம் நடப்பது பெரிய சுமை யாகிவிட்டதால் எங்களுக்குத் தெரிந் தவர் ஒருவர்மூலம் பாடம் சொல் லிக்கொடுக்க இசைந்தார். மனி தரைப்பார்த்தால் மனித வர்க்கத் திலேயே சேர்க்கமுடியாது. மிருகம் என்று கூறலாம். என் முகத்தை இதுவரையில் பார்த்ததில்லை. ஆனால் விஷயத்தைமட்டும் நன்றாக சொல் லிக்கொடுக்கிறார். சிள்ளு புள்ளு என்று சதா சீறிவிழுவதுதான் எனக்குப்பிடிப்பதே இல்லை.

மற்றொ:-யாரம்மா அந்த அபூர்வ ஆத்மா! கோபால பண்டிதரா!...

அவள்:—இல்லை! இல்லை. ஸாமி நாதன் என்று பெயருள்ள வித் வான், தங்கப்பதக்கங்கள் கூடப் ப்ரிசு வாங்கியிருக்கிறார். அவருக்கு விவாகமானதும் தெரியவில்லை; ஆகாததும் தெரியவில்லை. ஆனால் கைவிரல் ச்வாதீனமற்ற ஒரு தங்கை மட்டும் அடிமைபோல் வாழாவெட் டியாயிருக்கிறதாகக்கேள்வி...

என்று அவர்கள் பேசுவதைக் கேட்டவுடனே ஸரஸாவின் உணர்ச்சிகள் காட்டு வெள்ளம் போல் கரை உடைத்துக்கொண்டு பொங்கிவந்து அவளை ஒரு குலுக் குக்குலுக்கின. இனிமேல் சந்தே கமே இல்லை. தன் கணவன்தான்

அது. தனது நாத்தனர் உயிருடன் தான் இருக்கிருள் என்பதையறிந் ததும் ஸரஸா முன்பின்னறியாத பெண்ணுயினும் உணர்ச்சி மேலீட் டால் அந்தப்பெண்ணே ப்ரமிக்கும் படி தடாரென்று அவள் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து காலேயே பிடித்துக்கொண்டு,

"தாயே! நீங்கள் யாரோ, நான் யாரோ இந்த காவேரித் தாயார் தான் எனக்குத் தற்சமயம் உங்கள் மூலம் உதவிபுரிய வந்திருக்கிருள். இப்போது நீங்கள் தெரிவித்த அதே மனிதர்தான் எனது கணவர். அந் தம்மாள் எனது நாத்தனர். அவருக்கு விவாகமாகியதோ இல்லேயோ என்கிற சந்தேகமே வேண்டாம். (நடந்த வரலாற்றைக் கூறி) என் னம்மணீ! நடந்தது இதுதான் எங். கள்மீதுள்ள அளவற்ற வாஞ்சை யால், என் நாத்தனர் நன்மையைக் கோரி எங்கள் சினேகிதை அமரா பாய் தாமாகச் செய்த இந்த ஒரே காரணத்திற்காக வயிறும் பிள்ளேயு மாக என்னே அனுப்பிய பிறகு அந்த மனிதர் இருப்பிடத்தைக்கூட தெரி விக்காது என்னேச் சித்திரவதை செய்துவிட்டார்.

அடிமை என்று சொல்லிய தன் அர்த்தம் இப்போது தெரிந்ததா! எத்தனேதான் சிறப்புடனிருக்கும் தாய்வீடா யிருப்பினும் கணவனின் ஆதரவில் காட்டில் வசித்தாலும் உண்டாகும் சுகத்திற்கு ஈடு இது வருமா! என் தாயே! உங்களே நான் சாக்ஷாத் பேசும் தெய்வமா கவே எண்ணுகிறேன். இதுவரை யில் என் கணவரிருப்பிடமே தெரி யாது தவித்த எனக்கு பகவான் பரி பூரண க்ருபை செய்து உங்களேக் காட்டிவிட்டார். எப்படியாவது தாங்கள் பெரிய மனது செய்து என்னேயும் என் குழந்தையையும் என் நாதரிடம் சேர்த்துவிடவேண்டு வது உங்கள் பாரம். நான் இனி அரைக்ஷணங்கூட இங்கிருக்கமாட் டேன். என்னேத் தங்களுடன்கூட அழைத்துச் செல்லவேண்டும். இந்த மகத்தான உபகாரம் உங்களே தலே முறைக்கும் காக்கும்" என்று கண் ணீர் பெருகக்கெஞ்சிளுள்.

"இதைக்கேட்ட அவர்களின் வியப்பு கூறத்திற மற்றது. "என்ன! ஸாமிநாதனின் மனே வியா!" என்று அந்தப் பெண் அப் படியே தம்பித்துவிட்டாள். ஸரஸா தான் வந்த காரியத்தையும் தன்னே யுமே மறந்து புதிய உலகில் ப்ரவே சித்தது போன்ற புத்துணர்ச்சி யால் மோதப்பட்டாள்.

அந்த பெண் ஸரஸாவைத் தூக்கி உட்காரவைத்து, "அம்மா! நான் உன்வயதுதான் இருப்பேனே, உன்னேவிட சிறியவளாகவே இருப் பேனே! அனேகமாக நான் உன் கணவர் ப்ரமச்சாரி என்றுதான் நம்பியிருந்தேன். நான் எனது குருபத்தினிக்கு என்னுலான உப காரத்தைச் செய்யக் காத்திருக்கி றேன். நாங்கள் நாளே விடியற்காலே காரிலேயே போகப் போகிறோம். நான் இன்றே என் தகப்பனரிடம் சொல்லிவிடுகிறேன். நீங்க்ள் உங் கள் குழந்தையுடன் ப்ரயாணத் திற்குத் தயாராக விருங்கள். எதற் கும் உங்கள் தகப்பனுரைக் கூட அழைத்து வருவதுதான் உசிதம். எப்படியாவது என் தகப்பனர்மூலம் உங்களே அவரிடம் சேர்த்துவிடு கிறேன். இதுநிச்சயம்!

அல்ப விஷயத்திற்காக இத்த கையதண்டனேயை அளித்தது மனித சுபாவத்திற்கேற்றதல்ல... இவ்வளவு ஆத்திரக்காரரா அவர்!' என்று வியந் தாள். ஸரஸாவின் நெஞ்சையழுத் திக்கொண்டிருந்த பெரும் பாதை

சற்று விலகி... தனக்கும் விமோசன முண்டாகியதென்றே சந்தோஷஅலே அவள் இதயத்தில் மோதியது.

## 25

ஜெயராமபுரம் மிகவும் சிறிய ஊராயினும் அதற்கு அரைமைல் தூரத்தில் ஒரு ப்ரஸித்தி பெற்ற திவ்யஸ்தலம் கமலாலயம் என்கிற பெயருடன் இருக்கின்றது. அவ்வூரில் கமலவல்லித் தாயார்தான் ப்ரத்யக்ஷ அம்மன். கமலவல்லித் தாயார் ஒரு தாமரைக் குளத்தில் பக்தர்களுக்குக் கிடைக்கப்பெற்று அனேக செல்வவந்தர்கள் சேர்ந்து ப்ரம்மாண்டமான கமலாலயத்தை நிறுவி அம்மனே ப்ரதிஷ்டை செய்ததால் அந்த ஊருக்கே கமலாலயம் என்கிற பெயர் உண்டாகியது.

அந்த அம்மனுக்கு வருஷத்திற்கொருமுறை வஸந்த உத்ஸவம் பத்து தினங்களுக்கு வெகு தடபுடலாகச் செய்து தினம் ஒரு ப்ரபல கச்சேரி நடத்துவது வழக்கம். அந்த சமயம் அவ்வூரைச் சுற்றியுள்ள பல க்ராமத்து ஜனங்கள் கமலாலயத்தில் கூடிவிடுவார்கள்.

அன்றும் அதே போன்ற உத்ஸவத்திற்கு சாமிநாதன் போயிருந்தான். கூட்டம் எள்ளுபோட்டால் எள்ளுவிழாது. காரணம் அன்று மிகவும் பெயர்பெற்ற தாசி ரத்தின ப்ரபா நாட்டியமாடப்போகிருள். அவளுக்கு பெண்களே பின்பாட்டு பாடப்போகிருர்கள். ஆதலால் கூட்டம் ஒன்றும் நிபாய்க்க முடியாத விதம் அடைபட்டுக் கிடந்தது.

இரவு சரியாக பத்துமணியடித்தவுடனே "வனமோகினியோ! ஜகன்மோகன வடிவழகியோ!" என்று ஐயுறும்படியான வனிதாரத்தினம் ஜல் ஜல் என்று பாதஸரம் ஒலிக்க கோடி சூர்யப்ரகாசம்போல் சபைக்கு வந்துநின்றதுதான் தாமதம். அந்த ஆரவாரத்தின் பேரொலியையும் ஜனங்களின் உத்ஸாகத்தையும் அளவிட்டே கூறமுடியாது. ஆட்டம் ஆரம்பமாகியது. வரிசை க்ரமமாக ஆடிக்கொண்டு வரும் அபூர்வ அழகைக்கண்டு மயங்காத ஆத்மாக்கள் வெகு சொல்பந்தான் எனலாம்.

உலகத்திலுள்ள எந்த ஆச்சரியத்தைக் கண்டாலும் சிடுசிடுக்கும் சிடுமூஞ்சியாகிய சாமிநாதன் அந்த நாட்டியத்தையும் அந்த அத்புத அழகுப் பதுமைபோன்ற ரத்னப்ரபாவையும் பார்த்ததும் அப்படியே தடைகட்டிய நாகம்போலும், மந்திரவாதியின் மந்திரக் கோலேக் கண்டு அடங்கும் பிசாசைப் போன்றும் அப்படியே ப்ரமித்துப்போய் நின்றுவிட்டான்.

நாட்டியம் என்ருல் வெறும்கூத்து என்றும் கேவலமான ஆபாஸம் என்றும் எண்ணியிருந்த அவன் மனமேஇப்போது வியந்தும், கூறத்திறமற்ற ஆனந்தத்தை அடைந்தும் அந்த அபூர்வ கலையை ரஸித்து, சபாஷ் போடுகிறது என்ருல் வேறு என்ன சொல்வது? அவன் கண்களேயோ, காதுகளேயோ ஏன்...இதயத்தைக்கூட நம்பாது திகைக்கும்படியாகிவிட்டது.

பெண்களில் இத்தகைய அழகு கூட இருக்கிறதா! கலைகளில் நாட்டியக்கலையைப்பற்றி பல ச்லோகங்கள் படித்திருக்கிருனேயன்றி அதை வேண்டுமென்று கைக்கொழுப்புக்காரர்கள் எழுதி வைத்திருப்பதாக அவன் இதுபரியந்தம் எண்ணியிருந்தான்: அந்தக்கலேயில் இத்தனை வசீகரமான சக்தியும் கவர்ச்சியும் இருப்பதை நேரில் அறிந்தபிறகு பெண்களைப் பற்றி சம்ஸ்க்ருத வித்வான்கள் எழுதியுள்ள அனேக காவியங்களின் ரஸனையும் அழகும் அவனையறி

யாது அவன் மனத்தில் பொங்கி எழுந்தன.

அப்போது ரத்னப்ரபா ஒரு அருமையான கர்ணாமிருத ச்லோகத்தைத் தானே பாடியவாறு வெகு அழகாக நாட்டியமாடினாள். சம்ஸ்கிருதத்தை அவள் மிகவும் சுத்தமாயும் அர்த்த பாவம் த்வனிக்கும்படி குயிலினும் இனிமையாக மதுரமாய் பாடுவதையும் கேட்டு அவன் உள்ளம் புலகிதமுற்று அப்படியே உருகியது. இமை இசைக்காமல் பார்த்துப் பேரானந்தப்பட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்தான்.

சரியாக ஒரு மணிக்கு நாட்டியம் முடிந்ததும் அந்த கந்தர்வமாது அம்மனை அருகில் சென்று ஸேவிக்கச்சென்றபோது எத்தனை போலீஸ் பந்தோபஸ்துக்கள் இருந்தும் அந்த கூட்டத்தின் நெருக்கடியை அடக்க முடியவில்லை. ரத்னப்ரபா தனக்கு நாட்டியம் ஆடும்போது கிடைத்த பரிசுகள், ரூபாய்கள் முதலிய சகலத்தையும் அம்மனின் பாதகமலங்களில் சேர்த்துவிட்டு அம்மனை பக்தி ச்ரத்தையுடன் வணங்கிப் பின் தலை குளிந்தவாறே போய்விட்டாள்.

அம்மன் தரிசனத்திற்குச் சென்ற அவ்வணங்கின் தரிசனத்திற்குப் போட்டியிட்டு மண்டையை உடைத்துக்கொண்ட மைனர்களின் எண்ணிக்கைக் கூறத்தரமன்று. அதில் ஸாமிநாதனும் ஒருவன். கால் சலங்கையின் கலீர் கலீர் சப்தம் கேட்கக் கேட்க சாமிநாதனுக்குக் காளிதாஸனின் வர்ணனை ச்லோகங்கள் மனக்கண்முன்பு தாண்டவமாடி அவனைப்பின்னும் பித்தனாக்கின.

அவள் சென்ற திக்கைப் பார்த்துக்கொண்டு நிற்கும்போது அவன் பின்னாலிருந்து ஒரு குரல் "யாரு ஸாமிநாதனா!...என்றதைக்கேட்டுத் திரும்பிப் பார்த்தான். இவனுக்கு ஒன்றுமே தோன்றாது விழித்தான்.

"ஏன் சார் விழிக்கிறீர்கள்? தங்களைத்தான் தேடிவந்தேன்: நீங்கள் சம்ஸ்கிருதப் பண்டிதர் என்று கேள்விப்பட்டேன்; இத்தனை நேரம் நாட்டியமாடி நம்மை ஆனந்தஸாகரத்தில் அமிழ்த்திய ரத்னப்ரபாவுக்கு சம்ஸ்க்ருதமென்றால் உயிர். அதை நன்றாகக் கற்றுக்கொண்டு அர்த்தத்துடன் பாடி இன்புறவேண்டுமென்று மிகவும் ஆசைப்படுகிறாள். நானும் அதற்குச் சரியான ஆட்களைத் தேடிக்கொண்டிருந்தேன். இங்கு யாரோ ஒருவர் தங்களைக் காட்டினார். அதனால் தங்களிடம் வந்தேன். அதோ வருகிறாரே அவர் எனது நண்பர். அவரும் ஒரு பண்டிதருக்காகத்தான் அலைகிறார் ...என்று கூறும்போது மற்றொருவர் அங்கு வந்தார்.

ஸாமிநாதனின் ஆச்சரியத்தையும் மனவெழுச்சியையும் அளவிட்டுக் கூறமுடியுமா! பதில் சொல்ல முடியாது விழிக்கிறான். அந்தரங்கமாக இதயத்திற்குள் ஏதோ ஒன்று பரமசந்தோஷத்துடன் குதிக்கின்றது. "ரத்னப்ரபாவுக்கு நானா! சொல்லிக்கொடுப்பதா?" என்று தனக்குத்தானே நினைக்கிறான்.

இதற்குள் இரண்டாவது வந்த மனிதன் சற்று விசனத்துடன் "உம், ஏன் சார்! யோசனை செய்கிறீர்களா!...இச்சமயம் எனது மைத்துனன் இருப்பிடம் தெரிந்தால் உடனே அவனுக்கு ஏற்பாடு செய்து விடுவேன். அவனும் சம்ஸ்கிருத பண்டிதன்தான்...

சாமி இடைமறித்து "உமது மைத்துனனா! அதுயாரு, எங்கிருப்பது, என்ன பேரு?" என்று அடுக்கடுக்காகக் கேட்டான்.

"உம். அதொரு பாரதக் கதை. ஏதோ ஒரு காலத்தில் அவனுடைய

தங்கை அகிலாபாய் என்கிற பொம்மையை நான் கல்யாணம் செய்து கொண்டபோது அவளைப் பார்த்தேன். பிறகு காலவிதி எங்களைப் பிரித்துவிட்டது. நான் ஒரு செட்டியாருடன் வியாபார நிமித்தம் ரங்கோன் போய்விட்டேன். பல வருஷங்களாக அங்கேயே இருந்ததால் என் பெற்ருேர் உற்ருேர் சகலரும் போன இடம் தெரியவில்லை. நான் ரங்கோனில் சண்டையாரம்பமாகியதும் பலபேர்களுடன் தப்பித்துக் கொண்டு கால் நடையாகவே வந்து சேர்ந்து பிழைத்ததே புனர்ஜன்மமாயிற்று. வந்தபிறகு எத்தனையோ ப்ரயாஸைப்பட்டு விசாரித்தேன். சிலர் அகிலா இறந்துவிட்டதாயும், சிலர் ஓடிவிட்டதாயும் சொல்கிருர்கள்.

ஒருவரைப்பற்றியும் ஒரு தகவலும் தெரியவில்லை. என் மைத்துனன் பெயரும் ஸாமிநாதன்தான். ஆசையைக் கட்டோடு விட்டுவிட்டேன். இப்போது பட்டாளத்தில் சேர்ந்துவிடத் தீர்மானித்து இந்த நண்பன் வீட்டிலிருக்கிறேன். இவருக்கு பரதநாட்டிய சாஸ்திரமும் மிகவும் நன்ருகத்தெரியுமாதலால் என் ப்ரபாவுக்கு இவர் சில பதங்கள் சொல்லிக்கொடுக்கிருர்.''

18206

என்று சொல்லிக்கொண்டு வருவதைக்கேட்ட ஸாமிநாதன்... ''என்ன! நீ அகிலாவின் கணவனு! நான்தான் ஸாமிநாதன். பலவருஷங்களுக்கு முன்பு பார்த்ததால் அடையாளமே தெரியவில்லை. அடாடா! என் அகிலாவுக்குக்கூட விமோசனம் வந்ததா! ஐயோ! நெருப்புக்குச் சமமான என் அகிலா மிகவும் பரிசுத்தமாயிருக்கிருள். அவளுக்கு எவ்விதமான அப்பழுக்கு இல்லை. எந்த நாய்கள் அப்படிச் சொல்லின? அடாடா! என்ன ஆனந்தம்! என்னை இப்போது தெரிகிறதா!... என்ருன் படபடப்புடன்.

இதைக்கேட்ட அம்மனிதன் ''ஹா! என் அகிலா உயிருடன் இருக்கிருளா! நீயா சாமிநாதன்!...என் கதியே முடிந்துவிட்டதாக எண்ணினேன்....சாமி! அகிலா சவுக்யமாயிருக்கிருளா! இப்போது நான் அவளைப் பார்க்கமுடியுமா...ஐயோ! அவள் என்னை மன்னிப்பாளா!'' என்று கூறும்போது கண்ணில் ஜலம் வந்துவிட்டது.

சாமிநாதனுக்கும் சந்தோஷம் தலை கால் தெரியவில்லை. ''மாப்பிள்ளை! உங்களை முதலில் அகிலாவிடம் கொண்டுசேர்ப்பதுஎன்கடமை. தான் செய்த தவறை உணர்ந்து வருந்தும்போது மன்னிக்காமல் இருக்கமுடியுமா? அப்பேர்ப்பட்ட ஸீதையும் ராமனும் விதிவசத்தால் பிரிந்து கூடவில்லையா! நளன் தமயந்தி, சகுந்தலை துஷ்யந்தன் முதலியவர்களைப்போல் நீங்களும் பிரிந்து கூடுகிறீர்கள்.ஸரி.நான் ரத்னப்ரபாவுக்கு [illegible]வேட்டு சொல்லுகிற விஷயத்தை நாளை சொல்கிறேன். முதலில் நாம் அகிலாவிடம் போகலாம்'' என்று நாம் முன்ெருரு அத்தியாயத்தில் கூறியபடி அவனை அழைத்துவந்தான்.

ஒவ்வொருவருடைய மனத்தில் ஒவ்வொரு விதமான புயலடிக்கும் ரகஸியத்தை யாரறியமுடியும்? அகிலா காப்பியை வைத்துச்சென்றவள் மறுபடியும் வராததால் அவளையே எதிர்பார்த்திருந்து கண்ணும் பூத்தது. ஆனல் அகிலாவின் காதுகளில் அதேசமயம் அந்த கனின் அபூர்வ கானத்தின் இசையமுதம் பக்கத்து வீட்டில் வைக்கும் இசைத் தட்டு வழியாகப் புகுந்து பரவசமூட்டியது.

''மலர்ந்த இதழ்'' முதல் பாகம் முற்றிற்று,

பிரதிக்ஞை மட்டும் (பத்து படங்களுக்குமேல் கொண்டது கிளேஸ் பதிப்பு) தனிப் புத்தகமாக ரூ. 1-க்கு விற்கப்படும். மலர் வாங்குவோர்க்கு ஷை கதையும், தவிர இதர 32 அறிஞர்களின் அரிய விஷயதானங்களும் அனேக அழகிய படங்களும் இரண்டே ரூபாய்க்கு கிடைப்பது, சர்க்கார் கிருபை கூர்ந்து நியூஸ்பிரிண்டு உபயோகப்படுத்த அனுமதித்ததால்தான் சாத்யமாகிறது. மலரின் அளவு சென்ற ஆண்டைப்போல அகல-நீட்டமில்லாமல், 20-வதாண்டு மலரைப்போல் $8\frac{1}{2}$'' உயரம், $5\frac{1}{2}$'' அகல அளவில் வெளிவரும். மலர் பிரதிகள் மிகவும் திட்டமாகவே அச்சிட அனுமதி கிடைத்திருப்பதால், முந்திக்கொள்பவர்களுக்கே பிரதி நிச்சயம் கிடைக்கும். மலர் முற்றும் பதிவானபிறகு பணம் அனுப்புவோருக்கு ப்ரதிக்ஞை தனிப் புத்தகம் மட்டும் (ரூ. 1. வீதம்) கிடைக்கும்.

நாளது 11—12—44ல் வெளியாகும் சரத்ருதுமலரில் 15 அழகிய படங்கள் வெளிவருகின்றன. 13 புது ஸ்திரீ எழுத்தாளர்களின் திறமை வெளிப்படுத்தப்படுகிறது. வழக்கம்போல் 112 பக்கங்கள், ரூ. 1—8—0 சூபர்பைன் கிளேஸ் பேப்பர். சரத்ருது மலரின் மேலட்டைப் படமே, இதுவரை வெளிவந்துள்ள ருதுமலர்களின் மேலட்டைப் படங்களுள் சிறந்ததென நீங்கள்கொண்டாடுவீர்கள். நீலத்தாரகை வானத்திலே சரத் சந்திரன் நகைக்கையிலே, இயற்கை விம்மிக் குதிக்கையிலே, மாதவனின் கீதாம்ருதம் ஆறாய்ப்பெருக, மயிலும், குயிலும், பசுவும் அக் குழலிசையைக் கேட்டுக் கோவிந்தக் காதலர்களாகிவிடுகிறார்கள். அழகின் கலைவடிவாகிய மோகனன் ஆவியைத் தொட்டிழுக்கின்றான்! கண்டு களியுங்கள்... கதைகள், கட்டுரைகள், உண்மைச்சித்திரம், நாடகம், உள்ளக்கிளர்ச்சி, ஹாஸ்யம்—யாவும் அடங்கி தனிச்சிறப்புடன் வெளிவருகிறது.

மலர்ந்த இதழ் முதல் பாகம் இவ்விதழில் முடிவடைகிறது. பல ஊர்களில் ஆகஸ்ட்—டிஸம்பர் மோகினி இதழ்கள் வேண்டிய அளவு கிடைக்காததால், மலர்ந்த இதழ் முதல்பாகம் (கிளேஸ் பதிப்பு) ரூ. 1-4-0 வீதம் வெளியிடுகிறோம். தனிப்புத்தகமாக ஷை முதல் பாகத்தைப் படிக்கும் புது வாசகர்கள், நாளது ஜனவரியிலிருந்து மோகினியில் இரண்டாம் பாகத்தைத் தொடர்ந்து படிக்கலாம்.

மேலும் மேலும் உங்கள் பேராதரவைக்கோரி, இதுவரையளித்து வந்த உத்ஸாகத்திற்காக எமது வந்தனத்தைச் செலுத்துகிறோம். கலை வாழ்க! அன்பு வாழ்க!

—வை. மு. கோ.

## நினைவிருக்கட்டும்

(1) 22-வது ஆண்டு பொங்கல் மலர். ரூ. 2/- இது ஜனவரி இதழுடன் கூடத்தான் அனுப்பமுடியும். சந்தாதாரராயில்லாதவர்கள் 4 அணா ஜனவரி இதழுக்காகச் சேர்த்து அனுப்பவேண்டும். மலர்மட்டும் தனியாக அனுப்ப இயலாது.

(2) சரத்ருது மலருக்குப்பணம் அனுப்பும்போது, இதற்குமுன் வெளியான கிரீஷ்ம, வர்ஷ ருதுமலர்கள்வாங்காதிருந்தால் அவற்றிற்கும் சேர்த்து அனுப்புங்கள். அவசியம் படிக்கவேண்டிய நூல்கள்.

PRINTED & PUBLISHED BY V. M. PARTHASARATHY
AT "JAGANMOHINI" PRESS, STATION ROAD, SINGAPERUMALKOIL

Jagan Mohini - Regd. No M. 2210.

